விலை: 60.00
பக்கங்கள் - 20
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

சங்குநாதம்
சங்கு 26
ஒலி 059 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 04 ஞாயிற்றுக்கிழமை (16.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பாலச்சந்திரன் படுகொலை குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்



### அமைச்சர் சரோஜா சாவித்திரி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனைப்படுகொலை செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து 19

## தமிழர்களின் உணர்வுகளை சீனாவால் மாற்ற முடியாது

### செல்வம் அடைக்கலநாதன்



(கொழும்பு)

தமிழ் மக்களின் உணர்வுகளை சீனாவால் ஒருபோதும் மாற்ற முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் 19

# சமமான வாய்ப்பு வழங்க கல்வியில் மறுசீரமைப்பு



### யாழில் பிரதமர் ஹரிணி அமரசூரிய

(யாழ்ப்பாணம்)

அதிசிறந்த தரமான கல்வியை அனைவருக்கும் சமமாக வழங்க கல்வியில் மறுசீரமைப்புச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## பயிரிடப்படாத காணிகளை அடையாளம் காண நடவடிக்கை

(கொழும்பு)

பயிரிடப்படாத காணிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 19

## உள்ளூராட்சி சட்டமூலம் திங்கள் விவாதம்

(கொழும்பு)

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி 19

## இளங்குமரன் எம்.பி விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வாகன விபத்தில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர், யாழ்ப்பாணம் நோக்கித் தனது 19

## அநுர அரசாங்கத்தின் முதலாவது பட்ஜெட் நாளை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

அநுர அரசாங்கத்தின் முதலாவது பட்ஜெட் நாளை திங்கட்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பட்ஜெட் தொடர்பான விவாதம் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் இந்த மாதம் 25 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு பட்ஜெட்டின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக் 19

## மானிப்பாய் கட்டுடையில் பூக்கண்டுகள் விற்பனை நிலையத்தில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடைச் சந்தியில் அமைந்துள்ள பூக்கண்டுகள் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று மாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்தினைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குக் கடும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு 19

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் இன்று

(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி 19

## யாழ்.போதனாவில் இளங்குமரனை பார்வையிட்ட பிரதமர் ஹரிணி



(யாழ்ப்பாணம்)

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனை பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றிரவு பார்வையிட்டார். 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடங்கள்

Assistant Accountant - பெண்
- வயதெல்லை 23 தொடக்கம் 30 வரை.
- க.பொ.த உயர்தரம் கணக்கீட்டு பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Monitoring Officer (cleaning Service) - ஆண்
- வயதெல்லை 25 தொடக்கம் 50 வரை.
- க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வேலை அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
நேர்முகத்தேர்வு : 18.02.2025, 19.02.2025 மற்றும் 20.02.2025
நேரம் : காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை.

Golden Eagle K.T (P.V.T)LTD
758,Hospital Road, Jaffna.
021 222 5102
(C-2272)

## வீடு உடன் விற்பனைக்கு

நாவலர் றோட் அன்னசத்திர லேனில் 1½ பரப்புடைய (ஆறு அறைகள் கொண்ட) அழகிய மேல் மாடி வீடு உடன் விற்பனைக்குண்டு.

074 370 7195
074 174 4500
(3439)

## திறப்பு விழா

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர் களது மென்பொருள் தொடர்பிலான கற்கை கள் நலன் கருதி நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆனந்த மண்டப கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவானது இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம-7)

WESTERN UNION MONEY TRANSFER · DHL · Ria · Enriching Your Life · aramex · MMBL Money Master · Dialog · MoneyGram

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.

SRI MURUGAN
ஸ்ரீமுருகன்
(C-2273)
No.303, K.K.S Road,
Jaffna, Srilanka.
Tel : 0094 21 222 2690 / 5392

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோவிலிலிருந்து 200 மீற்றரில் 9 பரப்பு செம்மண் காணி விற்பனைக்குண்டு.
வீடு கட்டுவதற்கும் பண்ணை அமைப்பதற்கும் தோட்டம் செய்வதற்கும் உகந்தது.
(3429)

தொடர்பு : 076 419 6358

## வீடு விற்பனைக்கு

நல்லூர் மருதடி வீதியில் (பொஸ்கோ பாடசாலை அருகில்) 1.5 பரப்பு காணியில் அமைந்த இடைக்கால வீடு வளவு விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
(3437)

077 809 3293
076 270 2176

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600
(848)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கச்சேரி சோமசுந்தரம் வீதியில் 2¾ பரப்பு காணி திருத்தியமைக் கப்பட்ட இடைக்கால வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:
077 974 1382
(3434)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (Ey) இலக்க மொறிஸ் மைனர் கார் மற்றும் (7 Sri) இலக்க வொக்ஸ்வகன் கார் யாழில் விற்பனைக்குண்டு.
(3436)
076 693 2227
077 623 7416

## காணி விற்பனைக்கு


இணுவில் கிழக்கில் குடியிருப்பு சூழலில் கிணற்றுடன் கூடிய 4 பரப்பு காணி விற் பனைக்குண்டு. இவ்விரண்டு பரப்பாக வும் வாங்கலாம். விலை பேசித் தீர்மானிக் கப்படும். தரகர் தேவையில்லை.
17.02.2025 தொடக்கம் 23.02.2025 வரை மாலை 4.30 மணி முதல் 6.00 மணிவரை பார்வையிடலாம்.
071 313 6033
(3432)

## மாடி வீடு விற்பனைக்கு

யாழ். நகரில் ஜின்னா வீதியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
077 199 2180
தொடர்பு நேரம்
காலை 8.00 மணி - மதியம் 1.00 மணி வரை
(3433)

## மரண அறிவித்தல்

பிறப்பு
09 - 03 - 1961



இறப்பு
14 - 02 - 2025

## முருகேசு கதிர்காமநாதன்

மத்தொனியைப் பிறப்பிடமாகவும் பாலிவேட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கதிர்காமநாதன் நேற்று முன்தினம் (14.02.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - மீனாட்சி தம்பதியரின் புதல்வனும் ரேணுகா (ஓய்வு நிலை ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் பிரதீப், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இராசமணி, யோகேஸ்வரி, யோகநாதன், ஈஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சஜானி, ஜெயகாந்தன், ஜெய்சுதா, ஜெயகவிதா, தயாளினி, யாழினி, பிரவீன், பிரவீனா,ஞானம், அபிராம், நிதுர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபினாவ், அஸ்வினா ஆகியோரின் பெரியப்பாவும் அமரர் தியாகராசா, அமரர் கிருஷ்ணகுமார், சிவசேகரன், கேதீஸ்வரன், ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நல்லடக்கத்திற்காக காலை 11 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
(C- 2278)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்
(எழுத்தாளர், கவிஞர், ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - கல்வித் திணைக்களம்)

தோற்றம் 08.11.1947
மறைவு 12.03.2012



அன்பின் இருப்பிடமாய்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
இலக்கியத்தை போதித்த ஆசானாய்
இருந்து எம்மை வளர்த்த அப்பாவே
நீங்கள் மறைந்து பதின்மூன்று ஆண்டுகள்
ஆகிவிட்டபோதும் உங்கள் அறிவுரைகள்
காதிலே கேட்கிறது.....

குடும்பத்தினர்
கொற்றன்தறை,
பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.
(845)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 23.05.1971
மறைவு 2025.01.18

கடந்த 2025.01.18 ஆம் திகதி அன்று
இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் இராசதுரை லதாகாந்தன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 17.02.2025 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங் களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன் னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] கோயில் வீதி, உடுவில்.
([illegible] 623, 076 8227 402)
(852)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## ஆறுமுகம் சந்திரசேகரம்

அவர்களின் பிரிவால் துயருற்று
இருக்கும் குடும்பத்தினர்
அனைவருக்கும் எனது ஆழ்ந்த
அனுதாபத்தினை தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா
சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2277)

பழமுதிர்ச்சோலை,
காரைநகர்.

பிரிவால் துயருறும்...
கனகசபை தர்மகுலசிங்கம்.

# சாதாரண, உயர்தரப் பாடத்திட்டங்கள் மாற்றப்படமாட்டாது - மஞ்சுள விதானபத்திரன

புதிய கல்வி சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் பரீட்சை முறை மற்றும் சாதாரண தர மற்றும் உயர்தரப் பாடத் திட்டங்கள் மாற்றப்படாது என்று தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மஞ்சுள விதான பத்திரன ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சீர்திருத்தங்கள் கல்வி முறையில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவராது என்று கூறிய அவர், பரீட்சை முறை மற்றும் பாடங்களைப் புதுப்பிக்க கணிசமான அளவு நேரம் எடுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு புதிய உலகிற்கு ஏற்றவாறு மாணவர்களுக்கு ஒரு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சீர்திருத்தங்கள் ஒரே நேரத்தில் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டால் ஒரு பெரிய நெருக்கடி உருவாகும் எனவும் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பரீட்சைகள் மற்றும் பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டால் மாணவர்கள் தயாராவதற்குக் குறைந்தது இரண்டு ஆண்டுகள் தேவைப்படும்.

அதன்படி பாடத்திட்டம் படிப்படியாகப் புதுப்பிக்கப்பட்டு தரம் 1 முதல் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் என்றும் தற்போது 10, 11,12 மற்றும் 13 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்குச் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்து கல்வி அமைச்சகத்துடன் கலந்துரையாடல்கள் நடந்து வருவதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எட்டு வருடங்களுக்கு ஒருமுறை பாடத்திட்டத்தைப் புதுப்பிக்கும் முறை வழக்கம் போல் தொடரும் என்றும் பணிப்பாளர் நாயகம் விதானபத்திரண மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# பதவி வெற்றிடங்கள்

**தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் அதன் யாழ் சேவை நிலையத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.**

| விபரம் | தெல்லிப்பளை | யாழ் சேவை நிலையம் |
|---|---|---|
| மருந்தாளர் (With SLMC) | | 1 |
| தாதிய உத்தியோகத்தர் (With SLMC) | 1 | 1 |
| மருந்தக உதவியாளர் | 2 | 2 |
| வெளிக்கள அலுவலர் | 1 | 1 |
| முதியோர் பராமரிப்பாளர் | 3 | |
| சுத்திகரிப்பாளர் | 2 | 2 |

(C-2279)

**விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களின் சுயவிபரத்தினை எமது tellicoophospital@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிடாகவும், 0767711417 என்ற Whatsapp இலக்கத்தினூடாகவும் எதிர்வரும் 2025.02.23 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**மேலதிக தகவல்களுக்கு: 0776367378, 0772380196**

**தலைவர்**
**தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை**
**தெல்லிப்பளை**

# 1 ஆம் ஆண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 28.02.2024 புதன்கிழமை
அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர். தர்மலிங்கம் தர்மஜெயசூரியர்

(Rtd.customer Services Manager, Bank of Ceylon)

தோற்றம் 22.08.1949 — மறைவு 28.02.2024

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு
இன்று 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11
மணியளவில் அன்னாரின் இல்லத்தில்
நடைபெறவுள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்பசகிதம்
வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி
பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கிறோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

அரசவீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:-
த.ரோகினிதேவி (மனைவி) - 021 223 0785
த.ரோகன்ராஜ் (மகன்) (Rohan Enterprise) - 077 175 8485
த.தேனுகன் (மகன்) - 077 889 2185

(849)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 174 ஓட்டங்களால் ஆஸி.யை வீழ்த்தி ஒருநாள் தொடரை வென்றது இலங்கை

கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணியானது 174 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.


இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணியானது இரு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியானது முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

அதன்படி, குசல் மெண்டீஸின் சதம் மற்றும் அணித் தலைவர் சரித் அசலங்கவின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவுக்கு 4 விக்கெட் இழப்புக்கு 281 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் அதிகபடியாக குசல் மெண்டீஸ் 101 (115) ஓட்டங்களையும், சரித் அசலங்க 78 (66) ஓட்டங்களையும், நிஷான் மதுஷங்க 51 (70) ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

282 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி இலங்கையின் பந்து வீச்சுக்களில் நிலை தடுமாறியது.



ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை அடுத்தடுத்து பறிகொடுத்த அவுஸ்திரேலியா இறுதியாக 24.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 107 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதனால், இலங்கை அணி 174 ஓட்டங்களினால் வெற்றி பெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் அதிகபடியாக அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் மாத்திரம் 29 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் துனித் வெல்லலாகே 4 விக்கெட்டுகளையும், அஷித பெர்னாண்டோ மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் அதிகபடியாக கைப்பற்றினர்.போட்டியின் ஆட்டநாயகனாக குசல் மெண்டீஸ் தெரிவானதுடன், சரித் அசலங்க தொடரின் ஆட்டநாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டார்.(நி-8)

## சம்பியன்ஸ் டிராபிக்கான பரிசுத் தொகை அறிவிப்பு

இம் மாதம் 19 ஆம் திகதி தொடங்க உள்ள 2025 ஐசிசி ஆடவர் சம்பியன்ஸ் டிராபிக்கான பரிசுத் தொகையை சர்வதேச கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

2017 இற்குப் பின்னர் முதல் முறையாக ஐசிசி சம்பியன்ஸ் டிராபி நடைபெறும் நிலையில் எட்டு அணிகள் முதலிடத்துக்கான பெரும் பரிசுத் தொகையான 2.24 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்காக போட்டியிடும்.

இரண்டாம் இடத்தைப் பெறுபவர்கள் 1.12 மில்லியனைப் பெறுவார்கள்.

அதேநேரத்தில், அரையிறுதியில் தோல்வி அடையும் ஒவ்வொரு அணிக்கும் தலா 560,000 டொலர்கள் கிடைக்கும்.2017 சீசனிலிருந்து மொத்த பரிசுத் தொகை 53 சதவீதம் அதிகரித்து 6.9 மில்லியனை எட்டியுள்ளது.

சம்பியன்ஸ் டிராபியில், ஒவ்வொரு குழு நிலை போட்டிகளிலும் வெற்றி பெறும் அணிக்கு 34,000 டொலர்கள் வழங்கப்படுவது பிரதானமாக இருப்பதால் ஒவ்வொரு ஆட்டங்களும் முக்கியமானதாக இருக்கும்.

தொடரில் ஐந்தாவது, ஆறாவது இடத்தை பெறும் அணிகள் தலா 350,000 டொலர்களை பெறுவார்கள்.

அதேநேரத்தில் ஏழாவது மற்றும் எட்டாவது இடங்களைப் பெறும் அணிகள் 140,000 டொலர்களை பெறுவார்கள்.மேலதிகமாக நிகழ்வில் பங்கேற்பதற்காக அனைத்து எட்டு அணிகளுக்கும் தலா 125,000 டொலர்கள் வழங்கப்படும்.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாகிஸ்தான் ஐசிசியின் ஒரு பெரிய நிகழ்வை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

தொடரில் பங்கெடுக்கும் எட்டு அணிகள் நான்கு பேர் கொண்ட இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரண்டு இடங்கள் அரையிறுதிக்கு முன்னேறும்.

ஐசிசி ஆடவர் சம்பியன்ஸ் டிராபி ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் ஒரு முறை நடைபெறும்.இதில் உலகின் முதல் எட்டு ஒருநாள் அணிகள் போட்டியில் விளையாடும். (நி-8)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நூலகத்தை திறந்து வைத்த பிரதமர்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு நேற்று சனிக்கிழமை விஜயம் மேற்கொண்ட பிரதமர் புனரமைக்கப்பட்ட நூலகத்தை திறந்துவைத்தார்.

அதன்பின்னர் அங்கு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் லலீசன் மற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (நி-8-33)


## மணமகன் தேவை

1994, கத்தோலிக்கம், DOCTOR
பூர்வீகம் - அச்சுவேலி, வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11444.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(C-075)
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1997, இந்து, றோஹிணி, ENGINEER
பூர்வீகம் - இணுவில், வதியுமிடம் - இணுவில்
மணமகன் பதிவு இல: 11479.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(C-075)
www.EQMarriageService.com


கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## கடை வாடகை தொடர்பானது

கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கட்டடத்தின் கீழ்ப்புறத்தில் அமைந்துள்ள கடை 01 (21' நீளம் 10' அகலம்) வாடகைக்கு விடப்படும்.

கடை வாடகைக்குத் தேவையானோர் சங்கத்தில் விண்ணப்பப் பத்திரத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 03.03.2025 ஆம் திகதிக்கு முன்னராக "தலைவர், கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்**
**கோப்பாய் பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)** (8420)



ஆவது 70 அகவை விழா

யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண
மகாவித்தியாலய
ஓய்வுநிலை அதிபர், பொற்பதி
அறிவாலயத் தலைவர்,

**உயர்திரு. கணிதச்சுடர் சண் வாமதேவன்**

ஊரூராய்த் தொண்டியற்றி எல்லோரும்.
உயர்வுபெற அருங்கருமம் தினம் ஆற்றி
பேரோடு புகழ் விரும்பாக்காரியங்கள்
பகலிரவாய்ப் புரிந்தவரை வாழ்த்தி வாழ்த்திச்
சீரோடு விழாவெடுக்கும் சிறப்புமிகு
செயலதனை வணங்குகிறோம்! வாழ்த்துகிறோம்!
ஊரேழும் போற்றத்தகும் வாமதேவா !
உன்கீர்த்தி உலகுள்ள வரை வாழ்க!

(C-2264)

வாழ்த்துவோர் : *உயர்திரு. சண்வாமதேவன் அவர்களது 70வது அகவையை கொண்டாடும் விழாக்குழுவினர்*

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும்

# கம்பன் விழா-2025

[யாழ்ப்பாணம்]



## காலை நிகழ்ச்சிகள்

திகதி :16.02.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி
இடம் :நல்லை ஆதீன கலா மண்டபம்

### திருநாள் மங்கலம்

மங்கல விளக்கேற்றல்: திரு. க. திருமாலழகன் தம்பதியர்
[பணிப்பாளர், 'வலம்புரி' பத்திரிகை]
திரு. கு. சிவஞானசுந்தரம் தம்பதியர்
[செயற்பாட்டு முகாமையாளர்-வடமாகாணம், இலங்கை வங்கி]
கடவுள் வாழ்த்து: திருமதி. நிலானி கோபிசங்கர்
தலைமையுரை: கௌரவ. எம். கே. சிவாஜிலிங்கம்
[முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்]
தொடக்கவுரை: திரு. வி. திருக்குமரன்
[சட்டத்தரணி]

### சிந்தனை அரங்கு

நடுவர்
'கம்பவாரிதி' இ. ஜெயராஜ்
பொருள்:
**"கம்பக் கடலில் கண்டெடுத்த முத்துக்கள்..."**

அறம் - ஆறு. திருமுருகன்
கற்பு - ம. கோசலை
பக்தி - ஸ்ரீ. பிரசாந்தன்
வீரம் - வ. மகேஸ்வரன்

## மாலை நிகழ்ச்சிகள்

திகதி :16.02.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
இடம் :நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

மங்கல இசை : திரு. பி. பாலமுருகன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: டாக்டர் வெங்கடாசலம் சுதர்சன்
[சத்திர சிகிச்சை நிபுணர்]
டாக்டர் பொன்னம்பலம் ஆதித்தன்
[நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர்]
கடவுள் வாழ்த்து: திரு. ம. தயாபரன்
தலைமையுரை: கௌரவ. நா. வேதநாயகன்
[ஆளுநர், வடமாகாணம்]
தொடக்கவுரை: கௌரவ. ஸ்ரீமான் சாய் முரளி
[இந்தியத்துணைத்தூதுவர் யாழ்ப்பாணம்]
நிறைவுரை: கௌரவ. எம். ஏ. சுமந்திரன்
[முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்]

### நாடக அரங்கு

**"பார் ஆண்டவர்களும் பார் ஆள்பவர்களும் சந்தித்தால்..."**

இணைப்பாளர்: பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
சந்திப்போர்
தசரதனும் மக்கள் பிரதிநிதியும் - ந. ஐங்கரன், தெ. ஹர்சன்
வீடணனும் மக்கள் பிரதிநிதியும் - இ. சர்வேஸ்வரா, லோ. துஷிகரன்
பரதனும் மக்கள் பிரதிநிதியும் - செ. சொபிசன், த. கருணாகரன்

### வழக்காடு மன்றம்

நடுவர்
'கம்பவாரிதி' இ. ஜெயராஜ்
பொருள்:
**"கம்ப காவியத் துறவியர் நெறி பிறழ்ந்தது குற்றம்"**

வசிட்டர்- "தசரதனுக்கு அறம் உரைக்கத் தவறியமை"
சபரி-"இராமனைப் பிழையாக வழிப்படுத்தியமை"
வாதிகள் : ஸ்ரீபிரசாந்தன், தி. வேல்நம்பி
பிரதிவாதிகள் : ஐ. கதிர்காமசேகரன், ந. விஜயசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோயிலில் இந்த வாரத்திற் கான மனவளக்கலைப் பயிற் சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப் பாணத்திலுள்ள அறிவுத்திருக் கோயிலில் ஆரம்பமாகும்.

ஞாயிற்றுக்கிழமை தொடக் கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற் சிகள், எளிய முறை குண்ட லினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற் சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் K.R.முனிரத்தினம் வழங்கு வார். (நி-8)

175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

# சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் நடைபவனி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி வளாகத்தில் இருந்து நடை பவனி ஆரம்பமாகும்.

'தொற்றாநோய் களைத் தடுத்தல்' எனும் தொனிப்பொரு ளில் குறித்த விழிப்புணர்வு நடை பவனி ஒழுங்கமைக் கப்பட்டுள்ளது. (நி-8)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தின் வருடாந்த பொது கூட்ட மும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வலி.கிழக்கு கால் நடை வைத்திய நிலையத்தில் சங்கத் தலைவர் ந.தர்மராசா தலைமையில் இடம் பெறவுள் ளது. (நி-8)

# சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வட கிழ க்கு கலட்டி வீரகத்திப் பிள் ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கணபதி ஹோமம் ஆரம்பமாகி மூல மூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாய கப்பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக் கள் அறியத்தருகிறார். (நி-8)

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு அருள் மிகு ஸ்ரீமுதலி (மனோன் மணி) அம்பாள் ஆலயத் தின் வருடாந்த மஹோற் சவம் தொடர்பான கூட் டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரி பாலன சபைத்தலைவர் க.ராகீஷ்வரன் தலை மையில் நடைபெறவுள் ளது. (நி-8)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியா லயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாட சாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் குலசிங்கம் திலீபன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இலட்சும ணன் இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-8)

# அகவை தினவிழா

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலய ஓய்வு நிலை அதிபரும் பொற் பதி அறிவாலயத் தலைவரு மாகிய கணிதச் சுடர் சண்வாம தேவனின் 70 ஆவது அகவை தினவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் பொற்பதி அறிவா லயத்தில் பேராசிரியர் க.தேவ ராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-8)

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உபஅலுவலகம்

# ஆதனப்பெயர்மாற்றம்

நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 10, இணுவில் சிவகாமி அம்மன் வீதி, ஆதன இல 31/10 எனும் ஆதனமானது உரிமையாளர் சொந்தக்காரர் என்ற பெயரில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை தவஞானரஞ்சன் பெண் றாகினி என்பவர் தனது பெயருக்கு ஆதனப்பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

**உறுதியின் விபரம்**

1. பிரசித்த நொத்தாரிசு V.இளங்குமார் அவர்கள் முகதாவில் 846 ஆம் இலக்கத்தில் 23.12.2020 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியின்படி நிலபரப்பு 02 கொண்ட ஆதனத்தை ஆதனபெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T.தங்கராஜா அவர்களினால் 13649 ஆம் இலக்கத்தில் 9.03.2024 ஆம் திகதி அளந்து வரைந்த படத்தின்படி நில பரப்பு 01 குளி 17.16 ஆகும். படத்தின் படி எல்லைகள் கிழக்கு - சின்னையா சிதம்பரநாதன் ஆதனமும் வடக்கு - சீனியர் வீரவாகுவுக்கும் பெண் மாணிக்கத்துக்கும் ரவிரஞ்சிதன் பெண் ரஞ்சினியின் உரித்தாளருக்கும் உரிய ஆதனங்கள் மேற்கு - ஆறுமுகம் பெண் ஈஸ்வரியின் ஆதனம் தெற்கு - முருகேசு இராசதுரையின் ஆதனம்.
2. குறித்த ஆதனத்தை திருமதி தவஞானரஞ்சன் றாகினி என்பவர் பிரசித்த நொத்தாரிசு V. இளங்குமரன் அவர்கள் முகதாவில் 846 ஆம் இலக்கத்தில் 26.12.2020இல் முதுசமான சொத்து என்பதாலும் உரிய உரிமையாளர்கள் அடியற்று இறந்தமையாலும் உறுதிப்படுத்தல் சாதனம் ஊடாக தனது ஆட்சியுள்ளது என வெளிப்படுத்தியுள்ளார்.
3. இவ்வாதனம் வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதாலும் குறித்த செயற்பாடுகளானவை சட்டபூர்வமான வெளிப்படைத்தன்மை கொண்டதும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடாக காணப்படுவதாலும் ஆதனப்பெயர்மாற்று விண்ணப்பதாரரின் கோரிக்கைக்கமைவாகவும் இவ்வாதனம் தொடர்பான விபரங்கள் யாழ் குடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.
4. எனவே மேற்படி விபரங்களை வெளிப்படுத்தி இவ் உறுதி காணப்படு வதனால் இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்ட பூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ ஆட்சேபனைகளைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் தவஞானரஞ்சன் பெண் றாகினிஎன்பவரின் பெயருக்க ஆதனப்பெயர்மாற்றம் செய்வதனால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். ( சட்டபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேசசபைக்கு உண்டு என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்)

**செயலாளர்**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்** (சி-2269)




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டுதோறும் முன்னெடுக்கப்படும் புதிய கல்வியாண்டுக்கு செல்லும் 1000 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல் என்ற இலக்குடனான நிகழ்ச்சி திட்டத்தில் கூவில் பகுதியைச்சேர்ந்த 32 மாணவர்களுக்கு தலா 3500/= பெறுமதியான கற்றலுக்கான புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## செல்வி.மகாதேவன் இந்திராதேவி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 17.02.2025 நாளை திங்கட்கிழமை வீட்டுக் கிரியைகள் நடைபெற்று கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சாந்தி தானம் வழங்கப்பட்டு அங்கு நடைபெறும் கிரியைகளைத் தொடர்ந்து 18.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் பகல் 11 மணிக்கு ஆத்ம சாந்தி பிரார்த்தனை நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

*செல்வி மகாதேவன் இந்திராதேவி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமக்கு ஆதரவாக நின்ற அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

இப்படிக்கு தங்கள் நல்வரவை நாடும்
செல்வி.ம.மகாதேவி (சகோதரி)
திரு.திருமதி க.ப.கணகராயர் சுபதிராஜா (மருமகன்)
திருமதி.கோகிலா விஜயராகவன் (சிங்கராஜா) (மருமகள்)

(850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 480
16.02.2025


# காஸாவைக் குறிவைக்கும் அமெரிக்கா

## காஸாவைக் கைப்பற்றுவோம்!



கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக்குவேன், பனாமா கால்வாய், கிரீன் லேண்ட்டைக் கைப்பற்றும் அமெரிக்கா என்றெல்லாம் பேசி வந்த ட்ரம்ப் ஜனாபதி முதலே காஸாவைக் குறிவைத்து பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துவருகிறார். ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி யாகப் பதவியேற்றபோது காஸா ஓர் அற்புதமான இடம். அங்கு அழகான விடயங்களைச் செய்ய முடியும் என்றார். ஜனவரி 26இல் காஸாவிலுள்ள பாலஸ்தீனர்கள் ஜோர்டானுக்கும் எகிப்துக்கும் செல்ல வேண்டும் என்று அதிர்ச்சியைக் கிளப்பினார். ட்ரம்ப்பின் கருத்துகளை ஜோர்டான், எகிப்து மட்டுமன்றி மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளே எதிர்த்தன. குறிப்பாக சவுதி அரேபியா சுதந்திரமான பாலஸ்தீன நாடு அமைய நாங்கள் போராடுவோம் என்றது.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை வெள்ளை மாளிகையில் சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "காஸாவிலுள்ள பாலஸ்தீனர்கள் மற்ற அரபு நாடுகளுக்குச் செல்ல வேண்டும். அமெரிக்கா அந்தப் பகுதியைக் கைப்பற்றி வெடிக்காமலிருக்கும் குண்டுகளை அகற்றுதல், காஸாவை மறுகட்டமைப்பு செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும். அந்த நிலத்தைச் சொந்தமாக்கி, அங்கு பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்கினால் அது அற்புதமாக இருக்கும். மத்திய கிழக்கின் சொர்க்கபுரியாக காஸாவை மாற்ற வேண்டும். அமெரிக்கக் கட்டுப்பாட்டிலுள்ள காஸாவில், பாலஸ்தீனர்கள் மட்டுமல்ல பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த மக்களும் வாழ்வார்கள்" என்று தன் கனவை விவரித்தார்.

> "இஸ்ரேலின் குண்டு மழையால் சிதைபட்டுக்கிடக்கும் காஸாவைக் கைப்பற்றப் போவதாக அறிவித்து, பெரும் குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். ட்ரம்ப்!"

ட்ரம்ப்பின் கருத்துகளை ஆமோதிக்கும் வகையில் பேசிய நெதன்யாகு, காஸாவுக்கு, ட்ரம்ப் வித்தியாசமான எதிர்காலத்தை வழங்க நினைக்கிறார். வரலாற்றை மாற்றும் ஒன்றாக இது இருக்கும் என நம்புகிறேன்" என்றார்.

### ட்ரம்ப் பேச்சின் பின்னணி?

சர்வதேச அரசியல் பார்வையாளர்கள், ட்ரம்ப் முதலில் பாலஸ்தீனர்களை வெளியேற்ற வேண்டும் என்றார். பின்னர், காஸாவில் வேலைவாய்ப்பை உருவாக்குவோம். பாலஸ்தீனர்கள் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவரும் அங்கு வாழ்வார்கள்' என்கிறார். அவர் பேச்சிலேயே பல குழப்பங்கள் இருக்கின்றன. அவர் முன்னெடுத்திருக்கும் வேறு சில திட்டங்களிலிருந்து உலக நாடுகளைத் திசைதிருப்ப இப்படிக் குழப்பியடிக்கிறாரோ என்றுகூடத் தோன்றுகிறது. அதேநேரம் ஐ.நாவின் தரவுகள்படி, காஸாவில் எண்ணெய், எரிவாயு வளம் குறிப்பிடத்தக்க அளவு இருக்கிறது. ஒருவேளை அதைக் குறிவைத்து காய்நகர்த்துகிறாரோ என்ற சந்தேகமும் எழுகிறது" என்கிறார்கள்.

அமெரிக்க அரசியலை உற்றுநோக்கும் சிலரோ, எண்ணெய் வளத்துக்காக மட்டும் ட்ரம்ப் இப்படிப் பேசியிருக்க வாய்ப்பில்லை. நெதன்யாகு சந்திப்புக்குப் பிறகு ட்ரம்ப் இவ்வாறு பேசியிருக்கிறார். எனவே, ஹமாஸை அடியோடு ஒழித்துக்கட்டுவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாகக்கூட இது இருக்கலாம். அதேவேளையில் ட்ரம்ப்பின் இந்தக் கருத்து காஸாவைக் கட்டுக்குள் வைத்திருக்கும் ஹமாஸைக் கோபப்படுத்தியிருக்கிறது. இதனால் மீண்டும் போர் தொடங்கக்கூட வாய்ப்பிருக்கிறது என்று எச்சரிக்கின்றனர்.

20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் காஸா பகுதியில் வசிக்கின்றனர். அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது என்பது சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரானது. மேலும், பாலஸ்தீனர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற்றிவிடவும் முடியாது. காரணம் மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளே இதை அனுமதிக்காது.

### ட்ரம்ப்பை எதிர்க்கும் ஆதரவாளர்கள்?

ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் சிலர், ட்ரம்ப் முன்வைத்த அமெரிக்கா ஃபர்ஸ்ட் என்ற கொள்கைக்காகவே அவரை ஆதரித்தோம். ஆனால் தற்போது, காஸாவை மறுகட்டமைப்பு செய்ய அமெரிக்காவின் பணத்தைச் செலவிடப் போவதுபோலப் பேசுகிறார். இதனால் அமெரிக்காவுக்கு எந்தப் பெரும் பலனும் கிடைக்கப்போவதில்லை. அமைதிக்கான நோபல் பரிசைப் பெற முயற்சி செய்து வரும் ட்ரம்ப் அமைதி கேட்டுப் பல தசாப்தங்களாகப் போராடிவரும் பாலஸ்தீன மக்கள், அவர்கள் மண்ணில் நிம்மதியாக வாழ



# இனவன்மம் மத வன்மமாகிறது...

> "நகரங்களைக் கொழுத்தியது யார் என்பதல்ல கேள்வி, பைத்தியக்காரனிடம் தீப்பெட்டியைக் கொடுத்தது யார் என்பதே கேள்வி."

நஷ்ருதீன்ஷாவின் ஒப்பற்ற தத்துவம் இது. மேற்குறித்த தத்துவம் தமிழ் அரசியல் தளத்திற்கு நன்கு பொருத்த முடையது.

இலங்கைத் தீவில் ஏன் கொடிய போர் மூண்டது என்ற தேடலில் இனபேதம் என்பதே முடிவு.

ஆம், இதுவே உண்மை. அந்த உண்மை எம் அனைவருக்கும் தெரிந்ததாயினும் ஈழத்தமிழினத்தின் நியாயயான போரை பெரும்பான்மை ஆட்சியாளர்கள் பயங்கரவாதமாகச் சித்தரித்தனர். அவ்வாறான புனைவு பேரினவாதிகளுக்கு வெற்றியைத் தந்தது. அந்த வெற்றி முள்ளிவாய்க்காலில் தமிழினத்தைக் கொத்துக் கொத்தாய் கொன்றொழித்ததுடன் முடிவுற்றது.

இறுதி யுத்தத்தில் போர் குற்றமீறல்கள் நடந்ததான ஆதரங்கள் இருந்த போதிலும் அதை சரியான முறையில் கையாளாத தன் விளைவு அது பிசு பிசுத்துப் போனது.

இதற்கு சர்வதேசமும் ஒரு காரணம் என்று கூறினால் அதை மறுத்துவிட முடியாது. முன்பு தமிழினத்துக்கு ஏதும் இன்னல் நிகழ்ந்தால் அதைத் தட்டிக் கேட்பதற்கு ஆள் இருந்தது.

அப்படிப்பட்ட தலைமை இப்போது இல்லை. இதை நாம் இங்கு கூறும் போது பலருக்கு கோபம் எழலாம். ஆனால் அதுவே உண்மை.

தையிட்டி சட்டவிரோத விகாரை விடயம் தற்போது பேசு பொருளாக மாறியிருக்கும் நிலையில், விகாரைக்கு எதிரான போராட்டம் தீவிரம் பெறுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் காணிகளை அபகரிக்கும் செயற்றிட்டத்தை யார் செய்தாலும் அது தவறானது. ஆயினும் விகாரை விடயத்தை அரசியல் ஆக்கும் செயல் வடக்கிலும் தெற்கிலும் மிகத் தீவிரம் பெற்றுள்ளது.

சட்டவிரோத விகாரையை உடன் இடிக்க வேண்டும் என்பதான குரல்கள் ஒருபுறம் ஒலிக்க, விகாரையில் கை வைத்தால் அதற்கு பதிலீடு வேறுமாதிரியாக இருக்கும் என்ற தெற்கின் குரல்கள் இதற்குச் சான்றாக இருக்கின்றன.

மதச் சின்னம் என்பது நம்பிக்கையுடன் கூடிய ஒன்று. இந்த விடயத்தை நாம் சரியாகக் கையாள வேண்டும். இல்லையேல் அதன் தாக்கம் பாரதூரமாகிவிடும்.

இதுவரை காலமும் இனவன்மத்தில் ஏறி நின்று அரசியல் செய்தவர்கள் இப்போது மதவன்மத்தின் மீது தமது பாதங்களை பதித்துள்ளனர்.

இந்த மாற்றம் இலங்கையை மீளமுடியாத படுகுழியில் தள்ளிவிடும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



இராசநாயகம் பாரதி

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். மூத்த பத்திரிகையாளர் இராசநாயகம் பாரதி அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

பத்திரிகா தர்மத்தை இடையறாது பின்பற்றிய பாரதி எல்லோருடனும் அன்பாகப் பழகிய பண்பாளன்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல்கொடுத்தார்.

**விதானையார்:-** தையிட்டி விகாரை விடயம் எப்படி இருக்குதாம்.

**வாத்தியார்:-** என்னத்தச் சொல்லுறது. விகாரையை உடைக்க வேணும் எண்டு எங்கட தரப்பில சிலர் கூறுகினம். அதேநேரம் பலர் மௌனமாக இருக்கினம்.

உண்மையில தனியாருக்குச் சொந்தமான காணியில விகாரையைக் கட்டியிருக்கக் கூடாது.

இருந்தும் கடந்த காலத்து ஆட்சியில படையினர் முன்னின்று தையிட்டியில் விகாரையைக் கட்டிப் போட்டினம்.

அநுரவின்ர அரசாங்கத்திற்கும் தையிட்டியில் விகாரை அமைத்ததற்கும் தொடர்பில்லை என்பது உண்மை தான்.

இருந்தும் அரசாங்கம் என்ற முறையில, தையிட்டியில சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட விகாரை தொடர்பில அநுரவின்ர அரசாங்கம் ஒரு முடிவை எடுத்தாக வேண்டும்.

**பண்டிதர்:-** தெரியாமல் தான் கேட்கிறன். தையிட்டி விகாரையை உடைக்க வேணும் என்பதில வேலன் சுவாமிகள் உறுதியாக இருக்கிறார்.

ஆனால் வேலன் சுவாமிகள் தனித்து நிற்கும் போது, ஏதோ தையிட்டி விகாரை சைவ மக்களுக்கு மட்டும் எதிரானதென்பது போன்ற தோற்றத்தைத் தருகுது.

**சாத்திரியார்:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில கத்தோலிக்க மதகுருமார் எவரும் கலந்து கொள்ளவில்லை.

அப்படியானால் தையிட்டி விகாரையை உடைக்க வேணும் எண்டு தனித்து சைவ மக்கள் மட்டும் தான் கூறுகினம் என்பது போன்ற நிலைமை தெரியுது.


**மூப்பர்:-** உண்மை தான். வழமையில தமிழர் பகுதியில ஏதேனும் போராட்டம் நடப்பதாக இருந்தால், அதில கத்தோலிக்க மதகுருமாரும் அருட் சகோதரிகளும் கட்டாயம் பங்கேற்பினம்.

ஆனால் தையிட்டி விகாரை தொடர்பில நடந்த எந்தப் போராட்டத்திலும் கத்தோலிக்க மதகுருமாரோ அல்லது அருட் சகோதரிகளோ கலந்து கொள்ளவில்லை என்பதுடன் யாழ்ப்பாண ஆயர் இல்லமும் அது தொடர்பில எந்த வித அறிக்கையையும் விடவில்லை என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மூப்பர் கூறியதும் ஆலடி அமைதியாயிற்று. அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** எங்கட தமிழ் மக்களிட்ட இரண்டு பெரும் குறைபாடு உண்டு.

அதில ஒண்டு ஒற்றுமையின்மை. மற்றையது எல்லோரும் ஒன்று கூடி ஒரு தீர்மானத்தை எடுப்பதில்லை. இதால ஒரு சிலர் எடுக்கிற தீர்மானம் என்பது ஒட்டு மொத்த தமிழ் மக்களினதும் தீர்மானம் போல காட்டிக் கொள்கின்ற மிக மோசமான நிலைமையும் இருக்குது.



## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதை நாம் கண்டுகொள்கிறோம்

**கங்காணி:-** சிறாப்பர், இதைவிட இன்னுமொரு பிரச்சினையும் இருக்கத் தான் செய்யுது.

**சிறாப்பர்:-** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:-** தையிட்டி விகாரையை உடைக்க வேணும் எண்டு முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கு மாற்றுக் கருத்தை முன் வைத்தால், அவ்வாறு கருத்து முன்வைக்கிறவர்களைக் கண்டபாட்டில விமர்சனம் செய்து அவர்களைத் தமிழ் இனத் துரோகிகள் போல வெளிக்காட்டுகின்ற மிக மோசமான- அநாகரிகமான செயல்களும் தாராளமாக நடந்தாகிறது.

இதனால தான் எங்கட மக்கள் மௌனமாக இருக்கினம்.

ஆனால் தையிட்டி விகாரையை உடைக்க வேணும் எண்டு நாங்கள் வெளிப்படையாகக் கூறும் போது, அதன் எதிர் விளைவு தென்பகுதியில எப்படியாக இருக்கும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் சிந்திப்பதில்லை.

**விதானையார்:-** உண்மை தான். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு சில பல விடயங்களைக் குறிப்பிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி அவர்கள் கடிதம் எழுதினவர்.

இருந்தும் ஆனந்த சங்கரி அவர்கள், தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு, சம்பந்தர் போன்றவர்கள் ஆனந்த சங்கரியை கட்சித் தலைமையில் இருந்து விலக்குகின்ற சதிவேலையைச் செய்தினம்.

இதற்காக ஆனந்த சங்கரி தொடர்பில பொய்ப்பிரச்சாரங்களையும் முன்வைத்தினம். ஆனால் உண்மையில, விடுதலைப் புலிகளின் தலைவருக்கு ஆனந்தசங்கரி எழுதிய கடிதம் பகிரங்கமானது.

அந்தக் கடிதம் புலிகளுக்கு ஆலோசனை வழங்குவதாகவும் இருந்தது.

எனினும் புலிகளுக்கு எதிராக- சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுடன் சேர்ந்து மறைமுகமாகச் சதி செய்த தமிழ் அரசியல் தலைவர்கள் சிலர், வெளியில் தங்களை இனப்பற்றாளர்கள் போலவும் புலிகளின் விசுவாசிகள் போலவும் காட்டி; ஆனந்தசங்கரியின் தலைமைப் பதவியைத் தங்களுக்காக்கிக் கொண்டனர்.

**சாத்திரியார்:-** விதானையார் சொல்லுறது உண்மை தான். சம்பந்தர் போன்ற தமிழ்த் தலைவர்கள் ஆனந்தசங்கரிக்கு எதிராகச் செயற்பட்டு, அவரை புலிகளுக்கு எதிரானவர் போல காட்டினர். அப்போதைய சூழ்நிலையில புலிகளும் அதனை நம்பினர்.

ஆனால் உண்மையில புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகச் செயற்பட்டவர்கள் யார் என்பதைக் காலம் கடந்து தான் தமிழ் மக்களால உணர முடிந்தது.

**கங்காணி:-** உண்மை தான். ஆனந்த சங்கரியின்ர விடயத்தில மாவை சேனாதிராஜா அவர்கள் நீதியின் பக்கம் நின்றிருக்க வேணும். சங்கரியைக் கட்சியில் இருந்து நீக்கக் கூடாது எண்டு வாதிட்டிருக்க வேணும். ஆனால் அன்றைய சூழ்நிலையில் மாவையும் சம்பந்தரோட சேர்ந்து நிண்டவர்.

**பண்டிதர்:-** இப்ப சம்பந்தரும் இல்லை. மாவையும் இல்லை. இனி அவர்கள் பற்றிக் கதைப்பதால என்ன நடக்கப் போகுது.

**சாத்திரியார்:-** பண்டிதர் ஐயா. இஞ்ச தான் நாங்கள் தவறிழைக்கிறம். சம்பவங்கள் தான் வரலாறாகின்றன.

அந்த வரலாறுகளை நாங்கள் மீள் வாசிப்புக்கு உட்படுத்த வேணும்.

ஆனந்தசங்கரியர் தொடர்பில , இல்லாதது பொல்லாததைக் கூறி, அவரை தலைமைப் பதவியில இருந்து விலத்தி அந்த இடத்தைத் தாங்கள் பிடித்தினம்.

ஆனால் இறுதிக் காலத்தில சம்பந்தரும் கட்சித் தலைமையில இருக்கவில்லை.

அதேநேரம் மாவையும் கட்சித் தலைமையை இழந்து மன வேதனையோடு தான் இருந்தார்.

**மூப்பர்:-** சாத்திரியார் நீங்கள் இதைச் சொல்லுறியள். சம்பந்தர் எம்.பிப் பதவியில இருந்து விலக வேணும் எண்டு அவரோட சேர்ந்து நின்றவர்கள் கூறியதையும் சம்பந்தர் தன்ர செவியால கேட்டவர் தானே!.

அதுபோல மாவைக்கும் தேசியப்பட்டியல் எம்.பிப் பதவி வழங்கப்படவில்லை.

இதில ஆச்சரியம் என்னவென்றால், இதையெல்லாம் ஆனந்தசங்கரி ஐயா இருந்து பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்.

இவ்வாறு மூப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர் ஒற்றுமையானால் சாதிக்க முடியா தது என்று ஒன்றுமில்லையே?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்



திருவண்ணாமலை, காசி, சிதம்பரம், திருவாரூர் சிவன் கோவில்கள் இருக்கும் நிலையில் மாணிக்கவாசகர் உத்திர கேச மங்கை கோவிலை சிவனின் பிறப்பிடம் எனக்கூறக் காரணம் என்ன வியாசரே?

**போதைப் பாவனையில் இருந்து இளம் சமூகத் தைக் காக்க அரசியல்வாதிகள் என்ன செய்ய வேண்டும்?**

சாயிசெல்வம்-பருத்தித்துறை

எதுவும் செய்யாமல் அமைதியாய் இருந் தாலே போதுமானது.

ஆம், தன்பிள்ளை நல்ல பாடசாலையில் படிக்க வேண்டும், நல்ல பெறுபேறு எடுக்க வேண்டும், வெளிநாட்டின் முதல்தரப் பல்கலைக்கழகத்தில் படிக்க வேண்டும், அவன் ஏழு தலைமுறைக்கும் நோகாமல் இருந்து சாப்பிட வேண்டும். அதற்காக தமது வங்கிக் கணக்கை ஏத்தி வைத்திருக்கும் அரசியல்வாதிகளுக்கு எம் சமூகம் தொடர்பிலும் அவர்கள் நடத்தை தொடர்பிலும் கொஞ்சமும் அக்கறை இல்லை என்பதே பொருள்.

அதிகம் வெற்றிலை பாக்கு சாப்பிட்டால் புற்று நோய் ஏற்படும் என்கிறது மருத்துவம். இப்போது வெற்றிலை பாக்கு குதப்பாத இளைஞர் என்று யாரும் இருக்கின்றனரா என்றால், அரிசியில் பயறு தேடிய கதையே.

**திருவண்ணாமலை, காசி, சிதம்பரம், திருவாரூர் சிவன் கோவில்கள் இருக்கும் நிலையில் மாணிக்கவாசகர் உத்திரகேச மங்கை கோவிலை சிவனின் பிறப்பிடம் எனக்கூறக் காரணம் என்ன வியாசரே?**

விமல்ராஜ் - பருத்தித்துறை

உலகிலேயே முதன் முதலில் தோன்றிய சிவன் கோயில் என உத்திரகேச மங்கை கோவில் சிறப்பு பெறுகிறது.

இக்கோவில் வரலாறு பற்றிக் கூறின், நவக் கிரகங்கள் அறியப்படாத காலத்திலேயே இக் கோவில் தோற்றம் பெற்றுவிட்டது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஆம், இங்கு சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகியனவே கிரகங்களாக காணப்படுகின்றன. இதைவிட இராவணன் இக்கோவிலின் சிவனை வழிபாடாற்றியே அவனுக்கு திருமணம் நிறை வேறியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

நீங்கள் கேட்டிருந்த மேற்குறித்த கோவில்க ளில் தோற்றம் பதியப்பட்டிருக்கிறதாயினும் உத்திரகேச மங்கை சிவன் கோவிலுக்குத் தோற்ற வரலாறு எதுவுமில்லை என்பதே மெய்.

**மண்மூடையின் நடுவில் இருத்தி பிஸ்கட் கொடுத்து விட்டு ஐந்து குண்டுகளை நெஞ் சில் இறக்கியவர்கள் குறித்து?**

சுதன்-குப்பிழான்

உலகில் எந்த மூலையிலும் நடந்திராத கொடுமைகள் அனைத்தும் ஈழத்தில் நடந்திருக் கின்றன.

இதில் கொடுமை என்னவெனில், இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழினத்தின் மீதே இக் கொடுமைகள் நடந்திருக்கிறது.

மனித உரிமை மீறல்களின் உச்சபட்சம் எதுவோ அவ்வளவு மீறல்கள் எம் தேசத்தில் நடந்திருக் கின்றன.

இப்போதும் அந்த மீறல்களை செய்தவர்கள் தேசத்தின் காவலர்கள் எனப்போற்றப்படுகின்றனர். அவ்வாறெனின் இந்த நாட்டில் பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு நீதி கிடைக்குமா?

**எமது நாட்டின் நிவாரணமாக வழங்கப் படும் உலர் உணவுகள் பரிசோதனை செய் யப்பட்டதா வியாசரே?**

குரு - யாழ்ப்பாணம்

இவ்விடயத்தில் நூறு விகிதம் உண் மையாகச் செயற்பட வேண்டும்.

அது உண்மையாக நடைபெறுகிறதா என் றால் கேள்விக்குறியே.

ஏழைகளுக்குத்தானே கொடுக்கிறோம் எப்படியிருந்தால் என்ன. அவர்கள் அதைச் சாப்பிடுவார்கள் என்று நாம் நினைப்போமாக இருந்தால் அதைப்போல் கொடுமை வேறு ஒன்றும் இல்லை.

ஒரு உணவகத்தில் போய் அங்கு சமைத் தவர் யார்? சமைக்கப்பட்ட விதம், சமைத்த இடம் என்பவற்றை பார்க்காமல் சாப்பிடு கிறோம் என்றால் கடை உரிமையாளரில் உள்ள நம்பிக்கையே காரணம்.

இதேபோலத்தான் நிவாரணங்களும் தர மானதாக இருக்க வேண்டும். இல்லையேல் அது மகா பாவம்.

**கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. இதுபற்றி?**

தருஷ்-வதிரி

கல்வியைப் புத்திசாலித்தனத்துடன் ஒரு நாளும் ஒப்பிடாதீர்கள்.

நிரம்பப் படித்த முட்டாள்கள் இங்கே அதிகமாக இருக்கிறார்கள்.




**வியாசரே எனது அணியில் உங்களை வேட் பாளராக நிறுத்த விரும்புகிறேன் சம்மதிப்பீர் களா?**

பாலச்சந்திரன்-பண்டத்தரிப்பு

உங்கள் கட்சி எதுவென்று கூறுங்கள். அதில் போட்டியிடலாமா? இல்லையா? என்று கூறுகிறேன்.

ஏற்கனவே ஒருவருக்கு சனம் நம்பி வாக்க ளித்து படாதபாடு படுகுதுகள்.

இந்த நிலையில் நாம் வாக்குக் கேட்டு மக்கள் வீடுகளுக்குப் போனால் சனம் விளக்குமாத்தாலை அடிச்செல்லோ கலைக்கும்.

சாணம் தேய்க்காத விளக்குமாறு எண்டால் நாலு பேருக்குத் தெரியாமல் விடயத்தை முடிச்சிட லாம். சாணம் தேய்ச்சதால அடிச்சால் சனத்துக் கும் தெரிஞ்சு போகும். உடுப்பு துவைக்கக் கொடுக்க மனிசி துலைச்சுப் போடுவாளே.

**தையிட்டி விகாரையை உடைக்கச் சொல்லிக் கேட்டது சரியா வியாசரே?**

தமிழ்-யாழ்ப்பாணம்

தையிட்டியில் நிலம் பார்த்து, அத்திபாரம் வெட்டி, கட்டி, கல்லுயர்த்தி, தூபி கட்டி, வெள்ளை அடிக்கும் வரைக்கும் அமைதியாய் இருந்தவர்கள் அதன்பிறகு பொங்கி எழுந்து போராட்டம் நடத்தினால் என்னத்தை செய்து விட முடியும்.

தையிட்டி விகாரைக்கு எதிராகப் போரிடுவது சரியானது. ஆயினும் அதை உடைக்க வேண்டும் என்றும் இதற்குத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும் என்றும் கூறுவது இனங்களுக்கிடையே இன்னும் பிரிவையே ஏற்படுத்தும்.

**தமிழர் ஒற்றுமையானால் சாதிக்க முடியாதது என்று ஒன்றுமில்லையே?**

ஜெயக்குமார்-முகமாலை

"உசுப்பேற்றி உசுப்பேற்றி உடம்ப ரண களமாக்கிட்டாங்கடா"

ஒரு திரைப்படத்தில் வடிவேலு சொல்லும் வச னம் இது.

இவ்வாறு பெருமை பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர, எமது இளம் சமூகம் தொடர்பில் ஏதும் எம் மிடம் உண்டா என்றால் இல்லை என்பதே பதில்.

முன்பெல்லாம் ஒரு ஊரில் குடிப்பவர்கள் குறை வாகவும் குடிக்காதவர்கள் அதிகமாகவும் காணப் படும். இப்போது அந்நிலை தலைகீழாகவல்லவா இருக்கிறது.

திருமண வீடுகளிலும் மரண வீடுகளிலும் குடிக் காதவர்களை அப்பக்கோப்பை என்றல்லவா கூறிக் கொள்கிறார்கள்.

நாட்டுக்காய் போரிட வாருங்கள் என்று கூறி னால் எம் இளைஞர்களில் எத்தனை பேர் வருவார் கள் என்று உங்களால் கணித்துவிட முடியுமா?

**வியாசரின் தத்துவம் கேட்டு கன காலம் ஆகிவிட்டதே?**

ருதேஷ்-யாழ்ப்பாணம்

வலிமையானவர்களுக்கு வலியைத் தாங் கும் சக்தி இருக்கலாம். ஆனால் ஒருபோதும் வலிக்காமல் இருக்காது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாறே காத்திரு...


எந்த மதத்தின் வழிபாடு
மறுக்கப்பட்டு
தண்ணீருக்கு
தடைபோட்டு
கால் கொண்டு
காடைத்தனம் எல்லாம்
கட்டவிழ்த்தே
பேரினவாதத்தின்
வெடுக்குநாறி
தாண்டவம்

போதாதென்று
தையிட்டி விகாரையும்
வில்லங்கமாய் விரைகிறதே
சட்டத்தை சாக்கடையில் போட்டு
படை கொண்ட பலத்தோடு
அப்பட்டமான ஆக்கிரமிப்பாய்
பட்டப் பகல் பாதகமென
மலினமான மனங்களின்
அக்கிரமான அரசியல்
மகிழ்ச்சி கண்டதே
மதவாதத்தின் உச்சத்தில்
இவை எல்லாம்
நீதியான அரசியல்
செய்ய முடியாதவர்களின்
சிவப்புச் சிந்தனைகள் தானே ?
பகுத்தறிவு கூடவா
இவர்களிடம் பாழாய் போனது
புனிதம், தர்மம்
என்பதெல்லாம்
புத்தனோடு
முடிந்த கதையானதே !
வீராப்பாய்
இன்று விதைப்பதெல்லாம்
வினையல்லவா
விதைப்பது தானே
விளையும்
இவை எல்லாம் இன்றி
ஒரு மாசற்ற மாற்றம்
மலர்ந்தால்
தேசமெங்கும்
நல்ல மணம் வீசும்
இல்லையேல் நாற்றமே
நாட்டாமை செய்யும்.

**தேன் நிலா**



# கல்விக் கூடம்



கல்விக்கூடம் கள்வர் கூடமாய்
காலம் இங்கே மாற்றி விட
உருமாரி உருக்குலைந்து
ஊர் முழுக்க ஒப்பாரிக் களமாகி
போவதேனோ ஐயகோ

ஏன் இந்த அவலங்கள் எடுத்தியம்ப
முடியவில்லை எடுத்தியம்பிய போதும்
எந்தத் தீர்வும் எட்டாமல்
காலங்கள் கரைந்தோடி காகிதக்
கப்பலாகிக் காணாமல் போய்விடுதே

சாட்டு போக்கான சம்பாசனை
சல சலக்கும் நீரோடை போல்
நீண்டோடும் நிலை கண்டு
அலை மோதும் கடலைப் போல்
அலைமோதித் திரிகின்றோம்
அன்றாட வாழ்வினிலே

உண்மைகளின் ஊமைகளாய்
ஒதுங்கி விட முடியாமல்
அகலக்கண் விரிந்து அன்றாடம்
பார்த்தாலும்

கறைபடிந்த கரங்களுடன் கற்பிக்கும்
சில ஆசான்களால் கள்வர் கூடமாய்
மாறு நிலை காண்பதனாலே
ஏக்கத்தோடு எழுதுகின்ற வரிகள் இவை
போதும் இவ் இழிசெயல்கள் பக்குவமாய்
சொல்லுகிறோம் போதாகாலம் வந்தால்
பரலோகம் போய்விடுவோம்

**T.துரையரசன் - ஒட்டுசுட்டான்**

# பேராசை



இந்த உலகம் அழகானது!
இயற்கையின் படைப்பு அற்புதமானது
பல வண்ண நிறங்களாக
பல நிற மனிதர்கள்
மிக மிக அழகானவர்

அழகான மனித இதயத்துள் - ஏனோ
அசிங்கமான அழுக்கு மூடைகள்?

போட்டி, பொறாமை, பொய், பேய்காட்டு:
பித்தலாட்டம், பிரிவினை, வஞ்சகம், சூதுவாது:
துரோகம், ஏமாத்து, உருட்டு, புரட்டு:
சுரண்டல், சுயநலம், திமிர், களவு, குழிபறிப்பு,
அகம்பாவம், ஆணவம்,
அடங்காமை, பிடிவாதம், சந்தேகம்
அப்பப்பப்பா...!
எத்தனை...! எத்தனை....!

அன்பு, பண்பு, பாசம்:
காதல், காமம் - என
நல்லதையோர் மூலையில்
ஓரமாக ஒதுக்கிவிட்டு
இத்தனை அழுக்கு மூடைகள்
எப்படி கோலோச்சின இதயத்துள்
ஓ...! பேராசையாலா?

**சாந்தையூரிவன்**

# ஒழித்திடுவோம்

## போதை அரக்கனை






போதை எனும்
கொடிய அரக்கனின்
கோரப்பசிக்குத்
தீனியாகும்
இளம் பிஞ்சுகளைக்
காக்க
ஒழித்திடுவோம்
போதை அரக்கனை
காத்திடுவோம்
இளம் பிஞ்சுகளை



**ச.செல்வக்குணசந்திரன்**
**சாயிசெல்வம் - பருத்தித்துறை**

# அன்பு வாசகர்களே!



**உங்கள் அபிமான**
**சங்கு நாதத்தில் நீங்களும்**
**எழுதலாம்....**

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்ணை ஏன் மகாலட்சுமியாகப் போற்றுகிறோம்?



குழந்தைகளை, "கண்ணா வா... வா!" என்கிறார்கள். ஏன் "ராமா வா... வா!" என்று அழைப்பதில்லை? தமிழுக்கு அமுதென்று பெயர் என்கிறார்கள். ஏன் வேறு இனிப்பு வகைகளைக் குறிப்பிடுவதில்லை. இருக்கைகளில் எத்தனையோ சிறப்பு இருந்தும், ஏன் "சிம்மாசனம்" என்கிறார்கள்? புலியாசனம் என்று ஏன் சொல்வதில்லை?

எல்லா உயிரினங்களுக்கும் சக்தி இருக்கிறது. இருந்தாலும் "குதிரை சக்தி" என்றுதானே கூறுகிறார்கள். யானை சக்தி என்று கூறக் கூடாதா? எத்தனையோ நடைகள் அழகாகத்தான் இருக்கிறது. ஆனாலும் "அன்ன நடை" என்றே சொல்கிறார்கள்.

முருகனை அழகன் என்கிறோம். ராமனை வீரன் என்கிறோம். ராமன் அழகன் இல்லையா, முருகன் வீரன் இல்லையா? ஏன் இந்தப் பாகுபாடு? உரியவர்களின் சிறப்பைச் சொல்லும் விதம் இவ்வாறான புகழ்மொழிகள் சொல்லப்படுகின்றன.

"களை" என்ற சொல், லட்சுமியைக் குறிக்கும். களையோடு தென்படும் பொருளில் லட்சுமி வாசம் செய்கிறாள். நெற்கதிரில் தான்யலட்சுமி, செல்வத்தில் ஐஸ்வர்ய லட்சுமி, வீரத்தில் வீரலட்சுமி, வாளில் கடக லட்சுமி, யானையில் கஜ லட்சுமி இப்படி எல்லாவற்றிலும் அதன் திறமை தென்படும். மகாலட்சுமி உன்னிடத்திலும் உறைந்திருக்கிறாள் என்ற அர்த்தத்தில் குணவதியான, அழகான பெண்ணை மகாலட்சுமிக்கு ஒப்பிட்டுக் கூறுவது மரபு. அதற்கு அழகு மட்டும் காரணமல்ல. மகாலட்சுமி அதிஷ்டமானவள் என்பதும் காரணம்! விளக்க முடியாத ஏதோ ஒரு சிறப்பு மகாலட்சுமியிடம் இருப்பதால் பெண்களை மகாலட்சுமியாகப் பார்க்கிறார்கள்.

செல்வங்கள் மட்டும் போதும் என்று விரும்பி அவளை வழிபடுபவர்கள் ஏமாற்றம்தான் அடைவார்கள். என்று பிரம்மதேவன் தேவர்களிடம் கூறினார். தேவியிடம் நல்ல ஒழுக்கம், சாத்வீகமான குணம், உதவும் மனப்பாங்கு அனைத்தையும் வேண்டினால், அதன் பொருட்டு செல்வங்களையும் வழங்குவாள் என்கிறார் நான்முகன்.

மகாலட்சுமி திருப்தியையும், மனச்சாந்தியையும் வழங்கும் காருண்ய தேவி. விதியையும் மாற்றி ஒருவரை செல்வந்தனாக்கும் ஆற்றல் கொண்டவள் சௌபாக்கிய லட்சுமி. இத்தகைய பண்புகள் பெண்களுக்கும் பொருந்தும் என்பதால் அவர்களை கிரக லட்சுமியாகவே போற்றுகின்றன ஞானநூல்கள்!

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

# ஆச்சி அறிவுரை



## சூடு அடித்தல்

### பேராண்டி...

மாசிப்பனி மூசிப்பெய்யுது. சரியான குளிர் எண்டு அதிகாலையில எழும்பாமல் போர்த்திக் கொண்டு படுத்துடாத. அதிகாலையில எழும்பாமல் ஆறு மணிவரை படுக்கிறது தரித்திரம் பேராண்டி.

உனக்கு சூடு அடித்தல் தெரியுமோ? அதுக்கு முதல் ஆனை கட்டி போர் அடித்த பரம்பரை தமிழ்ப்பரம்பரை எண்ட சொல்லாடல் எதனால வந்ததெண்டு சொல்லுறன்.

முந்தின காலத்தில எம் முன்னோர்கள் வயல்லை விளையிற நெல்லை ஆனைகளைக் கொண்டு தான் சூடுமிதிச்சு நெல்லை எடுப்பினம். அதனால தான் ஆனை கட்டி போர் அடிச்ச... எண்டுற சொல்லாடல் வந்தது.

வயலில விளையிற நெல்லை அறுவடை செய்யிற நிகழ்வு சம்பிரதாயம் நிறைஞ்சது. அறுவடை ஆரம்பிக்க முன்னம் கிழக்குத் திசையாச் சூரியனைப் பார்த்து தேங்காய் அடித்து, தூபம் காட்டித்தான் அருவிவெட்டுத் தொடங்கும். நெல்லு வெட்டுற கத்தியை அரிவாள் எண்டு சொல்லுவினம்.

வயல் வெட்டி முடிய நெற்கதிர்களையெல்லாம் ஒண்டு சேர்த்து சாக்குப்படங்கை விரிச்சு அதிலை போட்டுப் பரவிட்டு காளை மாடுகளை நெற்கதிரிலை மிதிக்க வைப்பினம்.

சூடு அடிக்கிற இடத்தை களம் எண்டுதான் சொல்லுவினம். காளை மாடுகள் வட்ட வடிவமாக நடந்து கதிரிலை இருக்கிற நெல்லை மணி மணியாப் பிரிக்கும். அதுக்குப் பிறகு களத்தில இருக்கிற வைக்கோலை உதறித் தெரிவு செய்திட்டு கதிரில மிச்சம் மீதி இருக்கிற நெல் மணியை எடுக்கிறத்துக் காக நெற்கதிர்களை ஒண்டாக்கி அதைக் களத்திலே (நிலத்தில்) அடிப்பினம். அதிலை மிஞ்சுறதுதான் வைக்கோல்.

சாக்குப் படங்கிலை இருக்கிற நெல்மணிகளை ஒன்றாக் கூட்டி குவியலாக்கிட்டு சுளகால நெல்மணிகளை அள்ளிக் காற்று வளம் பார்த்து தூவுவினம். காத்தில சப்பி, கஞ்சல், குப்பையெல்லாம் பறந்து போக நெல்மணி தனியாக் கீழே விழும். சுளகை களத்திலை குல்லம் எண்டு தான் சொல்லுவினம். களத்தில என்ன கதைக்கவேணும் எண்டாலும் பொலி சொல்லித்தான் கதைப்பினம்.


இப்பிடி எல்லா நெல்லையும் தூசு நீக்கி எடுத்து அதை சாக்கிலை மூட்டையாகக் கட்டி, மாட்டு வண்டியில வீட்டுக்கு எடுத்துட்டுப்போவினம். அதிலை முதன் முதல்ல அமுதாக்கி சூரியனுக்குப் படைச்சிட்டு அதுக்குப் பிறகுதான் தங்கட சாப்பாட்டுக்கு எடுப்பினம்.

இந்தப் பொங்கலைப் புதிர்ப் பொங்கல் எண்டு சொல்லுவினம். பேராண்டி அந்தக்காலம் ஆரோக்கியமான, இனிமையான காலம். இப்ப அப்பிடி எந்த இனிமையும் இல்லை. எல்லாம் தனிமை தான்.

வயல் வெட்டி, சூடு அடிச்சு நெல் வீட்டுக்குக் கொண்டு வாரதெல்லாம் மிஷின் மயமாகிட்டுது.

இதுகள்ல பாரம்பரியமும் இல்லை. கூட்டு முயற்சியும் இல்லை. சந்தோசமும் இல்லை. இந்தக் கொடுமைகளாலதான் மண் மலடாப் போச்சு. மழை வந்தால் கொட்டித் தீர்க்குது. வரட்டால் வறட்சி காட்டுது.

எல்லாம் காலப்பிழை பேராண்டி. பழமையை மறந்தால் நிலை இதுதான் எண்டுறதை நீ புரிந்து கொண்டால் சரி. **ஆச்சி வருவா...**



மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

44



தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் அவரைச் சிறையிலிருந்து தப்பவைக்க முயன்றனர். அவர்கள் தென்னிலங்கையிலிருந்து விசேட பஸ்களில் வந்திருந்தனர். அவர்களின் முயற்சி தோல்வி கண்டதற்குக் காரணம் அவர்களின் திடசங்கற்பமின்மைக்குறை மட்டுமன்று. உரிய நேரத்தில் அவர்களுக்கு உதவிகள் வந்து சேராமையுமாகும் எனக் குறிப்பிட்டார்.

காசி ஆனந்தனின் கைதோடு யாழ்ப்பாணக் கோட்டையின் ராணி மாளிகை, பொலிஸாரின் விசாரணைத் தளமாகவும், சித்திரவதைக் களமாகவும் மாறத்தொடங்கியது. 1972 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை எதிர்த்து தமிழர் ஐக்கிய முன்னணி ஹர்த்தால் அனுட்டிக்குமாறு கோரியது. 24. மே. 1972 ஆம் ஆண்டு முற்றவெளியில் கூட்டணித் தலைவர் செல்வநாயகம் தலைமையில் மாபெரும் எதிர்ப்புக் கூட்டமொன்று நடந்தேறியது.

அதில் கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கம், "தமிழரும் படைக்கலம் ஏந்தும் நாள்வரும். ஆதலால் வெளிநாடுகளிலுள்ள குறித்த சில நிறுவனங்களுடன் அவர்கள் நட்புறவு வைத்துக் கொள்ளல் மிக அவசியமாகும் எனக் குறிப்பிட்டார். காசி.ஆனந்தன், "புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஆறு தமிழ்ப் பிரதிநிதிகளும் சுகவீனத்தினாலோ, விபத்தினாலோ, இயற்கைக் காரணிகளினாலோ இறக்க மாட்டார்கள். ஆனால் எவையோ பிறவழிகளில் அவர்களுக்கு மரணம் சம்பவிக்கும் என உணர்ச்சியோடு குறிப்பிட்டார். அவ்வுரை நிகழ்த்தியதன் பின்னர் ஜூன் 10 ஆம் திகதி காசி ஆனந்தன் கைது செய்யப்பட்டார்.

அரசாங்க சார்புடைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், தீவிரவாதத் தமிழ் இளைஞர் குழுவொன்றால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நல்லூர் கிராமசபைத் தலைவரான குமாரகுலசிங்கம், வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. தியாகராஜா ஆகியோர் மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை முறையே 1972 ஜூன் 04 ஆம் திகதியும். 07 ஆம் திகதியும் நிகழ்ந்தன. 15. ஜனவரி, 1973 ஆம் ஆண்டு அமைச்சர் குமார சூரியர் வேலணையில் ஒரு தபாற்கந்தோரைத் திறந்து வைக்கச் சென்றார். அவர் செல்லும் பாதையிலுள்ள மதகு ஒன்றினைத் தகர்ப்பதற்கென டைனமற்றுகளுடன் நின்ற ஞானசேகரன் (ரஞ்சன்), தாசன், திரைவீரசிங்கம் ஆகிய மூவர் கைதாகினர்.

இவை அனைத்துக்கும் அறிவுரை வழங்குபவராக மாணவர் பேரவைத் தலைவர் சத்தியசீலன் பொலிஸாரால் சந்தேகிக்கப்பட்டார். பல்கலைக்கழகத் தரப்படுத்தலிற்கு எதிரான மாணவர் பேரவைக்கு பி.சத்தியசீலன் தலைவராக விளங்கினர்.

(தொடரும்...)

# கடல் புறா

## இரகசியத்தின் திறவுகோல்

“ஆம்,” என்று தலையை ஆட்டினான் அமீர். இளையபல்லவன் சிறிது நேரம் தீவிர யோசனையில் ஆழ்ந்துவிட்டுக் கவலையுடன் கேட்டான். “அந்த எழுத்து என்னவென்று புரிந்ததா அமீர்?” என்று.

“புரியவில்லை.”

“நகல் சரியாக எடுத்தாயா?”

“அப்படியே எடுத்தேன்.”

“கையெழுத்து?”

“யார் கையெழுத்தையும் இம்மி பிசகாமல் நான் போடவல்லவனென்பதைத் தென் கலிங்க அதிகாரிகளே உணர்ந்திருக்கிறார்கள்.”

“அப்படியானால் அந்த வாசகத்தின் மொழி பெயர்ப்பு எப்பொழுது கிடைக்கும்?”

“இன்றிரவு.”

இளையபல்லவன் முகத்தில் கவலை பெரிதாகப் படர்ந்தது. “எச்சரிக்கையுடன் நடந்துகொள் அமீர்! முதலில் நாம் காணப்போகும் விடயத்தைப் பொறுத்திருக்கிறது அடுத்த நடவடிக்கை! நகலைப் படிப்பவன்..” என்று ஏதோ சொல்லப் போன இளையபல்லவனை இடைமறித்த அமீர், “பேசமாட்டான், கவலை வேண்டாம்,” என்றான்.

“அத்தனை நம்பிக்கையானவனா!” என்று கேட்டான் இளையபல்லவன்.

“நம்பிக்கையானவன்தான், எதற்கும் அவன் படித்து விடயத்தைச் சொன்னதும் நாவைத் துண்டித்துவிடுகிறேன்.”

“சே! சே! வேண்டாம் அமீர்.”

“அரபு நாட்டில் அப்படித்தான் பழக்கம்.”

“அந்தப் பழக்கம் நமக்கு வேண்டாம். அவனைச் சில நாட்கள் காவலில் வைத்துவிடு.”

“சரி, உங்கள் இஷ்டம்” என்று அலுப்புடன் பதில் சொன்னான் அமீர். இளையபல்லவனிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே சென்றான். அப்பொழுது சென்றவன் இரவில் தான் திரும்பி வந்தான். திரும்பி வந்தவன் முகத்தில் ஈயாடவில்லை.

“படைத்தலைவரே!” என்றழைத்த அமீரின் நாவும் மேலே பேச முடியாமல் திணறியது. அப்போதுதான் பஞ்சணையில் யோசனையுடன் படுத்த இளையபல்லவன் அமீரின் முகத்தில் திகைப்பைக் கண்டதும், “என்ன அமீர்?” என்று துள்ளி எழுந்தான். பதிலெதுவும் சொல்லாத அமீர் கதவைத் தாழிட்டுவிட்டுப் பூனை போல் மெல்ல நடந்து விளக்கிருந்த இடம் நோக்கி நடந்தான்.

இளையபல்லவனும் அந்த விளக்கருகில் வந்ததும், இடைக் கச்சையிலிருந்து எடுத்த ஓர் ஓலையை அமீர் நீட்டினான் படைத்தலைவனிடம். அதை விளக்கொளியில் படித்த படைத்தலைவன் முகத்தில் பெரும் ஆச்சரிய ரேகை படர்ந்தது. அமீரின் பெருவிழிகள் முன்னை விடப் பெரிதாகி முகத்திலிருந்து பிதுங்கிவிடுவன போல் காட்சியளித்தன.

இருவர் கண்களும் சந்தித்தன. அந்தச் சந்திப்பில் வியப்பு, அதிர்ச்சி முதலிய பல உணர்ச்சிகள் பளிச்சிட்டன. “இப்பொழுது புரிகிறது!




காலத்தின் பதிவு 139

புரிகிறது!” என்று இருமுறை சொல்லிக்கொண்ட படைத்தலைவன் ஓலையைத் தட்டிக் காட்டி, “இரகசியத்தின் திறவுகோல் இது! அப்ப்பா, எத்தனை பயங்கரமான திறவுகோல்! எத்தனை மர்மங்களை விளக்குகிறது!” என்று குரலில் பல உணர்ச்சிகள் அலைபாயக் கூறினான்.

நல்ல இருளில் திடீரென வீசிவிட்ட விளக்கெண்ணை போல அக்ஷயமுனைக் கோட்டையின் இரகசியமொன்றைத் திடீரென விளக்கிவிட்ட அந்த ஓலையை மீண்டும் மீண்டும் படித்த இளையபல்லவன் முகத்தில் பல உணர்ச்சிகள் பாய்ந்து சென்றன. என்ன பயங்கர இரகசியம். எத்தனை மர்மங்களை விளக்கு கிறது என்று அவன் உதடுகள் மீண்டும் முணுமுணுத்தன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்



படம்: உலகம் சுற்றும் வாலிபன்
இசை: எம். எஸ்.விஸ்வநாதன்
பாடல்: புலமைப்பித்தன்
குரல்கள்: ரி. எம். சௌந்தரராஜன் குழுவினர்

சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
ரொம்ப நல்ல மாமா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
ரொம்ப நல்ல மாமா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா

சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே
சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே
உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே
உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே
சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே

அன்பில் வாழும் இதயம் தன்னை தெய்வம் கண்டால் வணாங்கும்
எங்கே சொல்லு: வணாங்கும்
அன்பில் வாழும் இதயம் தன்னை தெய்வம் கண்டால் வணாங்கும்
ஆசை இல்லா மனிதர் தம்மை துன்பம் எங்கே நெருங்கும்
பொன்னில் இன்பம் புகழில் இன்பம் என்றே நெஞ்சம் மயாங்கும்
பூவைப் போலே சிரிக்கும் உன்னைக் கண்டால் உண்மை விளாங்கும்

சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே

முள்ளில் ரோஜா மலர்ந்ததாலே முள்ளுக்கு என்ன பெருமை
சிப்பிக்குள்ளே பிறந்ததாலே முத்துக்கு என்ன சிறுமை
எங்கே நன்மை இருந்த போதும் ஏற்றுக் கொள்ளும் உலகம்
அங்கே வந்து தழுவிக் கொண்டு போற்றும் நல்ல இதயம்

சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா

வானில் நீந்தும் நிலவில் நாளை
பள்ளிக்கூடம் நடக்கும்: பள்ளிக் கூடம் நடக்கும்
காற்றில் ஏறி பயணம் செல்ல
பாதை அங்கே இருக்கும்: பாதை அங்கே இருக்கும்
எங்கும் வாழும் மழலைச் செல்வம்
ஒன்றாய் சேர்ந்து படிக்கும் இல்லை ஜாதி மதமும் இல்லை
என்றே பாடிச் சிரிக்கும்

சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா
சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பாப்பா

அன்பு வாசகர்களே!
காலத்தால் அழியாத கானம் பகுதியில்
உங்களுக்குப் பிடித்த பழைய
பாடல்களை, பெயர், முகவரியுடன் வட்சப்
செய்தால் உங்கள் விருப்பப் பாடல்
உங்கள் பெயருடன் வெளிவரும்.
076 097 3126

# புன்னகையே பொக்கிஷம்...!

இன்றைய காலவோட்டத்தில் புன்னகை என்றால் என்ன என்று கேட்கும் நிலைக்கு மனித மனங்கள் வந்துவிட்டன. புன்னகை என்றால் வேறொன்றும் இல்லை "சிரிப்புதான்" உயிரோட்டம் இல்லாத தொலைபேசிகளில் வரும் எவரோ செய்யும் கேலிக்கைகளை பார்த்து புன்னகைக்கின்றோம்.

கூடவிருக்கும் உயிரோட்டம் உள்ள உறவுகளைப் பார்த்து புன்னகைக்க மறுக்கின்றோம். காலை எழுந்ததும் அறக்கப்பறக்க வேலைகளைப் பார்த்துவிட்டு அந்தரம், அவசரம் என்று வேலைகளுக்கு ஓடுகின்றோம். உடம்பு மட்டும் நாள் முழுவதும் ஓடிக் கொண்டே இருக்கின்றது.



எங்கள் சிந்தனையும் எதிர்காலம், முடிந்த காலம் போன்றவற்றின் மீதுதான். நிகழ்காலத்தில் யாருமே வாழ்வதில்லை. அப்படி இருக்க எவ்வாறு சிரிக்கத் தோன்றும் "சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே" என்பது புலமைப்பித்தன் வரிகள்.

பொன் பொருளில் இன்பம் என்று மயங்காமல் பூவைப் போல்சிரிக்கும்உள்ளம்கொண்டு விளங்கினால் எந்தத் துன்பமும் நெருங்காது. தடைகளைக் கூட தாண்டி செல்லும் வலிமை கிடைத்துவிடும். முகத்தில் ஒரு புன்னகையை எப்போதும் தவளவிடுங்கள். காலை எழுந்ததும் உங்கள் உள்ளங்கையைப் பார்த்து சிரித்த வண்ணம் கண்களை திறவுங்கள். பொழுது நல்லதாக விடியும் அதன் பின் கணவன், தாய், தந்தை, பிள்ளைகள் என அவர்களின் முகங்களிலும் புன்முருகலுடன் விழியுங்கள் அவர்களுக்கும் உற்சாகத்தை தந்து உங்களுக்கும் உற்சாகத்தைத் தரும். வீட்டை விட்டு வெளியேறும் போது அயலவர்களைக் கண்டால் புன்னகையுங்கள்.

அதுவும் மனதுக்கு ஒரு திருப்தி தரும். நீங்கள் தினம் வேலைக்கு சென்று வரும் வழியில் காணும் முகங்களுக்குப் புன்னகைக்கத் தவறாதீர்கள். வேலைத்தள வாயிலில் காப்போனைக் கண்டால் புன்னகையுடன் விழியுங்கள். அலுவலகத்தில் ஒவ்வொரு முகங்களையும் புன்முறுவலுடன் சந்தியுங்கள். அந் நாள் எப்படி இருக்கின்றது என்பதை நீங்களே உணர்வீர்கள்.

புன்னகைக்கு உள்ள வலிமை வேறு எந்த மருந் தாலும் முடியாது.

அவ்வளவிற்கு உங்கள் ஆரோக்கியத்தில் 100 மடங்கு செல்வாக்குச் செலுத்தும் புன்னகை.புன்னகையின் மறுவடிவம் அன்பு, நேசம், கருணை, உற்சாகம், காதல் என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். எனவே புன்னகைத்துப் பார்த்தால் அன்பு வடிவம் கொண்டவர்களாகப் பிறருக்கு உங்களை சித்தரித்துக் காட்டும். பிரச்சினைகளைக் கூட சிரித்துவிட்டு அந்த இடத்தில் இருந்து கடந்து வந்து பாருங்கள், அது எதிரிக்கு கூட ஆயிரம் மடங்கு வலியை ஏற்படுத்தும். சிரிக்க தெரிந்த ஜீவராசி மனிதன் மட்டும் தான். இதனை பணம் கொடுத்து வாங்கத்தேவையில்லை. மனம் திறந்தால் போதும்.மனங்களை திறந்து சிரித்து சிறப்பாய் வாழ்வோம்.

**க.கஸ்தூரி, கோண்டாவில்.**

# ஓநாயின் இரைக்கு உங்கள் காதலரின் பெயர்

"உங்கள் முன்னாள் காதலி, காதலன் பெயரை ஓநாய்க்கு வீசப்படும் இரைகளுக்கு நீங்கள் வைப் பீர்களா?" என்ன கேள்வி இது என்று தோன்றும். ஆனால் அமெரிக்காவின் டெக்சாஸில் இருக்கும் ஒரு காட்டுயிர் சரணாலயத்தில் இவ்வாறு செய்கின்றனர்.

காதலர் தினத்தன்று பொதுவாக காதலன், காதலி தங்களது அன்பை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். விட்டுச் சென்ற அல்லது முடிந்து போன உறவைக் கொண்டாடவும் சில வித்தியாசமான வழிகள் உள்ளன.



அப்படி டெக்சாஸில் உள்ள சான் அன்டோனியோ மிருகக்காட்சிசாலைகள் சரணாலயங்கள் உங்களது முன்னாள் காதலர் அல்லது காதலின் பெயர் கொண்ட உணவுகளை ஓநாய்க்கு வீச அனுமதிக்கிறது. முறிந்து போன உறவுகளின் பெயரை கரப்பான் பூச்சி, எலி அல்லது ஓநாய்க்கு கொடுக்கப்படும் இரைக்கு வைத்து கொடுக்க அனுமதிக்கின்றன.

5 அமெரிக்க டொலர் செலுத்தி இவ்வாறு பெயர் வைத்து விலங்குகளுக்கு உணவு வழங்கலாம். நிதி திரட்டும் முயற்சியாக இதனைச் செய்து வருவதாக காட்டுயிர் சரணாலயத்தின் இணை உரிமையாளர் தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் காதலர் என வரும்போது கோபத்தை வெளிக்காட்ட அளவே இருக்காது. எனவே அவர்களது பெயரை ஓநாய்களுக்குத் தூக்கி எறியும் உணவிற்கு வைத்தால் அவற்றை தூக்கி எறியும்போது விலங்குகளுக்கும் வயிறு நிறையும். மனிதர்களுக்கும் மன அழுத்தத்தின், வெறுப்பின் தாக்கம் குறையும் என்று கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

437


வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஈரல் கொழுப்பு படிவு சுட்டிக்காட்டும் பேராபத்து நிலை..

எமது பிரதேசத்தில் பலர், Fatty Liver எனப்படும் ஈரலிலே கொழுப்பு படிந்த நிலையிலே அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அண்மைக் காலமாக, இது ஒரு பாரிய சுகாதார பிரச்சினையாக காணப்படுகிறது. இது சம்பந்தமாகப் பலர் விழிப்புணர்வு அல்லது அக்கறை இல்லாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டு வருகிறது. உலகளாவிய ரீதியில், Liver Cirrhosis எனப்படும் ஈரல் பழுதடைந்த நிலைக்கு இந்த ஈரல் கொழுப்பு படிவு முக்கியமான காரணியாக காணப்படுகிறது. அத்துடன் இந்நிலை, ஈரலிலே புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகிறது. முன்பு, ஈரல் புற்றுநோய் மற்றும் ஈரல் பழுதடைந்த நிலை ஏற்படுவதற்கு மதுபான பாவனை, Hepatitis B மற்றும் Hepatitis C எனப்படும் ஈரல் தொற்று நிலை என்பன காரணங்களாக இருந்தன. ஆனால், அண்மைக் காலமாக, ஈரல் கொழுப்பு படிவு முக்கிய மான காரணியாக மாறியிருப் பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இவற்றிற்கு மேலதிகமாக, ஈரல் கொழுப்பு படிவு ஏற்பட்டவர்களுக்கு மாரடைப்பு, பாரிசவாதம் மற்றும் ஈரலிற்கு வெளியிலான புற்றுநோய்கள் என்பன ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, ஈரல் கொழுப்பு படிவினால் ஏற்படும் தாக்கம், ஈரலுடன் மட்டும் நின்று விடுவதில்லை. உடலில் வேறு பிரச்சினைகளையும் ஏற்படுத்தும். ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை உள்ளவர்களிலே, ஈரல் சம்பந்தமாக ஏற்படும் மரணங்களை விட, மாரடைப்பு, பாரிசவாதம் மற்றும் ஈரலிற்கு வெளியிலான புற்றுநோய்கள் என்பவற்றால் ஏற்படும் மரண வீதம் மிகவும் அதிகமாக இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது. உங்களுக்கு ஈரலிலே கொழுப்பு படிவு நிலை காணப்படுமாயின், அது பின்வரும் விடயங்களை உணர்த்தி நிற்கின்றது. நீங்கள் செய்யும் உடற்பயிற்சி போதாது, உடல் நிறை பராமரிப்பில் நீங்கள் கவனமின்றி இருக்கிறீர்கள், உணவு முறைகளில் கவனமின்றி இருக்கிறீர்கள் என்பவற்றை கூறி நிற்கின்றது.

இவற்றிற்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் உங்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்திரோல், பாரிசவாதம் என்பன ஏற்படும் அபாயம் அதிகமாக காணப்படுகின்றது என்பதையும் உணர்த்தி நிற்கின்றது. நீங்கள் அடிக்கடி மதுபான வகைகளைப் பாவிக்கிறீர்களா அல்லது சீனி அதிகம் சேர்க்கப்பட்ட பான வகைகளைப் பாவிக்கிறீர்களா என கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் கூறி நிற்கின்றது. நீங்கள் கவனமின்றி இருந்தால், உங்களுக்கு ஈரல், குடல் மற்றும் மார்பக புற்றுநோய்கள் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கும். தொடர்ந்து கவனயீனமாக இருந்தால், ஈரல் பழுதடைந்த நிலை ஏற்பட சந்தர்ப்பம் காணப்படுகிறது. எனவே ஒருவருக்கு ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை இருக்குமாயின், அவர் கவனக்குறைவாக இருக்க முடியாது. அதற்கு உடனடியாக, பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து, இந்த ஆபத்தான நிலையிலிருந்து வெளிவருவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும்.



உலகளாவிய ரீதியில், 25% ஆனவர்களுக்கு இந்த ஈரலில் கொழுப்புப் படிவு நிலை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால், எமது பகுதிகளில் இந்த விகிதாச்சாரம் அதிகளவில் காணப்படுகிறது. எமது பகுதிகளில் ஏறத்தாழ 35-40% ஆனவர்களுக்கு இந்த ஈரல் கொழுப்பு படிவு நிலை இருக்கலாம் என உய்த்தறியப்பட்டுள்ளது. இது திடீரென வளர்ந்தவர்களிலே ஏற்படும் ஒரு நிலை அல்ல. சிறுவயது முதலே காணப்படும் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை காரணமாக, சிறிது சிறிதாக உருவாகும் ஒரு ஆபத்தான நிலையாகும். இந்த பாரிய சவாலை எதிர்கொள்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி சிந்திக்க வேண்டி இருக்கிறது. முதலாவதாக, எமது சிறார்களை வளர்க்கும் போது, அவர்களை ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு பழக்கப்படுத்த வேண்டும். ஒழுங்கான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு முறை என்பவற்றில் கவனம் எடுக்க வேண்டும். இவ்வாறு கவனம் எடுத்தால் எதிர்காலத்தில் அவர்களுக்கு ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை ஏற்படாது. அதுமட்டுமல்லாது, இந்த நோய் ஏற் பட்டவர்கள் தமது உடல் நிறையை 5% குறைத்துக்கொண்டாலே, அவர் களுடைய ஈரலில் காணப்படும் கொழுப்பின் வீதம் குறைந்து வருவதாக ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் தமது உடல் நிறையை 10% அல்லது அதற்கு மேலதிகமாக குறைப்பார்களானால் அதனால் பல அனுகூலங்கள் ஏற்படுவது ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக அவர்களுடைய நிறையை 10% இற்கு மேலதிகமாக குறைப்பார்களானால் ஈரலின் கொழுப்பு வீதம் வெகுவாக குறைகிறது மற்றும் ஈரலில் ஏற்படும் Fibrosis எனும் நிலை குணமடைந்து வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த குறைந்த நிறையை அவர்கள் அப்படியே பராமரித்து வருவார்களேயானால், அவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், புற்றுநோய் மற்றும் ஈரல் பழுது நிலை என்பன ஏற்படும் வீதம் குறைவடைவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அடுத்ததாக, Active lifestyle எனப்படும் சிறந்த வாழ்க்கை முறையைப் பேணுவது அவசியம். எமது வாழ்க்கை முறையில், உடற்பயிற்சி வீதத்தை எவ்வாறு அதிகரிக்கலாம் என நாம் சிந்திக்க வேண்டும். எமது உணவு முறையில் நாம் ஏற்படுத்தும் சிறிய மாற்றங்கள் கூட, இந்த நிலையில் இருந்து நாம் மீள்வதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். உணவிலே மிக அதிகளவில் மரக்கறி வகைகள், இலை வகைகள், இனிப்புச் சுவை குறைந்த பழ வகைகள் என்பவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி, பேரீச்சம்பழம் போன்ற இனிப்பு கூடிய உணவு வகைகளையும் மாப் பொருட்களையும், எண்ணெய் வகைகளையும் வெகுவாக குறைத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். அத்துடன், இந்த நிலை உள்ளவர்கள் மதுபான வகைகள், பழரசங்கள் மற்றும் சீனி அதிகம் சேர்க்கப்பட்ட ஏனைய பான வகைகள் என்பவற்றை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.


அத்துடன் இந்த ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை உள்ளவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்திரோல், Metabolic syndrome போன்ற நோய்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு அதிகமாக இருப்பதால், இந்நோய்கள் இருக்கிறதா என பரிசோதித்து பார்க்க வேண்டும். Fatty liver இற்கு மேலதிகமாக மேற்கூறிய நோய்கள் இருக்குமானால், அவற்றைப் பூரணமாக கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். இவற்றை உணவு முறை, உடற்பயிற்சி அல்லது மருந்துகள் மூலமாக இந் நோய்களை பூரணமாக கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் எமக்கு பல அனுகூலங்கள் ஏற்படும். இதன் மூலம் பல வேண்டத்தகாத விளைவுகளை நாம் தவிர்த்துக் கொள்ள முடியும். Fatty liver எனும் நிலைக்கு என்ன மருந்துகள் பயன்படுத்தலாம் என்பது பற்றிய ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்றுவரை, இந்த நிலைக்கு பாவிக்கக்கூடிய எந்தவொரு வினைத்திறனான மருந்தும் அறிமுகப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்திலே, Combined Treatment எனப்படும் சில மருந்துகளின் இணைந்த பயன்பாடு, ஒரு பொருத்தமான மருத்துவ சிகிச்சை முறையாக அறிமுகப்படுத்தப்படலாம். எனவே மருந்துகள் இல்லாமல், மேற்கூறிய ஆரோக்கியமான நடவடிக்கைகள் மூலம் இந்த நோய் நிலையில் இருந்து விடுபடுவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# புடினை சந்திக்க தயார்! ஜெலென்ஸ்கி அறிவிப்பு



(கீவ்)

**ரஷ்ய ஜனாதிபதி புடினை நிபந்தனைகளுடன் சந்திக்கத் தயார் என்று உக்ரைனிய ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**

மேலும், உக்ரைனிய ஜனாதிபதி ஜெலைன்ஸ்கி புடினைத் தவிர மற்ற ரஷ்ய அதிகாரிகளைச் சந்திக்க திட்டமிடவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், 'நான் ரஷ்யர்களைச் சந்திக்க மாட்டேன், அது எனது திட்டத்தில் இல்லை. நான் ஒரே ஒரு ரஷ்யரை மட்டுமே அதாவது புடினை மட்டுமே சந்திப்பேன்.

அதுவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுடன் இரு நாடுகளுக்கான பொதுவான திட்டம் ஒன்று உருவான பிறகே, புடினுடன் அமர்ந்து பேசிப் போரை முடிவுக்கு கொண்டு வருவோம்.

அத்துடன் இந்த விடயத்தில் மட்டும் புடினைச் சந்திக்க தயாராக இருக்கிறேன்," என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ரஷ்ய மற்றும் உக்ரைன் பிரதிநிதிகள் சவுதி அரேபியாவில் சந்திக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஜப்பானில் கடும் பனிப்புயல்



(டோக்கியோ)

ஜப்பானில் இந்த மாதம் தொடங்கியதிலிருந்து கடுமையான பனிப்புயல் வீசி வருகிறது. அங்குள்ள வடக்கு மாகாணங்களான புகுஷிமா, சிமானே, யமகட்டா, டோயோமே உள்ளிட்டவற்றில் கடுமையான பனிப்புயல் வீசியது.

கடுமையான பனிப்புயல் காரணமாக அங்குள்ள வீதிகள், ரயில் தண்டவாளங்கள் பனியால் மூடப்பட்டுள்ளன. இதனால் குறிப்பிட்ட நேரங்களில் பேருந்துகள், புல்லட் ரயில் முதலிய பொது போக்குவரத்து சேவை தடை செய்யப்பட்டு மீண்டும் இயக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்குள்ள பள்ளி, கல்லூரி வளாகங்கள் மூடப்பட்டு ஒன்லைன் மூலமாக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்தநிலையில் ஜப்பானில் பனிப்புயலில் சிக்கி ஒரு வாரத்தில் 12 பேர் உயிரிழந்து உள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 600 | 700 | 600-700 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 1300 | 1400 | 1200 | 1200-1300 | 1400 |
| தக்காளி | 100 | 120 | 250 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 300 | 200 |
| கோவா | 350 | 350 | 350 | 250 | 400 |
| கரட் | 850 | 850 | 600 | 900 | 1000 |
| பூசணி | 140 | 140 | 120 | 80-100 | 200 |
| புடோல் | 150 | 280 | 200 | 250-300 | 400 |
| வாழைக்காய் | 200 | 140 | 150 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 170 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 600 | 450-550 | 800 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300 | 350-400 | 600 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 150 | 300 |
| பயற்றங்காய் | 600 | 650 | 650 | 500-600 | 600 |
| லீக்ஸ் | 450 | 400 | 300 | 400 | 600 |
| பீற்றூட் | 350 | 200 | 250 | 220 | 400 |
| கறிமிளகாய் | 1200 | 1000 | 1000 | 700-800 | 1200 |
| முருங்கைக்காய் | 2200 | 3000 | 1000 | 1500 | 2400 |
| போஞ்சி | 350 | 350 | 300 | 400-500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 600 | 600 | 700 | 500 | 500 |
| கீரை – 1 பிடி | 100 | 120 | 150 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 150-200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 240 | 250 | 150-250 | 220-280 |
| இராசவள்ளி | 600 | 500 | 600 | 500-600 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 200 | 100-170 | 250 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 150 | 150 |

# பேருந்து-மகிழுந்து நேருக்கு நேர் மோதி விபத்து!

- 10 பேர் உயிரிழப்பு
- 19 பேர் காயம்
- மகா கும்பமேளா சென்ற போது சோகம்



(டில்லி)

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்வில் கலந்து கொள்வதற்காகச் சென்ற மகிழுந்து ஒன்று எதிர் திசையில் பயணித்த பேருந்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர் .

நேற்று முன்தினம் இரவு மிர்சாபூர் பிரயாக்ராஜ் நெடுஞ்சாலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


விபத்தில் காயமடைந்தவர்கள் பொலிஸாரின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்டத்தின் 4 ஆவது ஆயரை வாழ்த்துவோம்



அடம்பன் இத்திக் கண்டல் கிராமத்தில் பிறந்து 60 வயதையடையும் (1965 - 2025) அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை; எல்லாம் கடவுளே எனும் குருத்துவ விருதுவாக்கோடு 31 ஆண்டுகள் (1994 - 2025) குருத்துவப் பணியாற்றியுள்ளார்.

மாசி மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை 2025 அன்று காலை 9.30 மணிக்கு மன்னார் மறைமாவட்டத்தில் மருதமடு அன்னையின் திருப்பதியில் உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக்கா 1:38) என்னும் ஆயர்த்துவ விருதுவாக்குடன் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டு 15 ஆண்டுகள் (2025 - 2040) ஆயர்ப்பணி புரிய அதிகாரம் பெறுவார்.

மேற்படி அருட்பொழிவு நிகழ்வின் பிரதம திருநிலைப்படுத்துனராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்னான்டோ ஆண்டகையும் துணைவர்களாக கொழும்பு மறைமாவட்ட பேராயர் மேதகு கலாநிதி கருதினால் மல்கம் இறஞ்சித் ஆண்டகையும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத்தலைவர் குருநாகல் ஆயர் மேதகு கலாநிதி கரல்ட் அன்ரனி ஆண்டகையும் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மேதகு கலாநிதி பிரைன் குட்வாகே ஆண்டகையும் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் செயற்படுவார்கள்.

மேற்படி நிகழ்வில் இலங்கையின் மறைமாவட்டங்களில் இருந்து 15 ஆயர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மாசி மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2025 அன்று மாலை 5 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயராகப் பணிப்பொறுப்பேற்பார்.

மாசி மாதம் 26ஆம் திகதி புதன் கிழமை 2025 அன்று மாலை 5 மணிக்கு புதிய ஆயர் தனது சொந்தப் பங்குத் தளமான மூங்கில்முறிச்சான் அடம்பன் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நன்றித் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்.

2.45 மணிக்கு அடம்பன் சந்தியில் இருந்து வரவேற்பு ஆரம்பமாகி 3 மணிக்கு புனித வியாகுல அன்னை ஆலய முன்றலில் நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டு பின்னர் திறந்த வாகனத்தில் பவனியாக ஆயர் தனது பங்குத் தளமான மூங்கில் முறிச்சான் அடம்பன் புனித அடைக்கல அன்னை ஆலயத்திற்குத் திருப்பலிக்கு அழைத்துச் செல்லப்படுவார். 5 மணித் திருப்பலியின் பின்னர் ஆயரைக் கௌரவிக்கும் நிகழ்வும் இரவுணவும் வழங்கப்படும் என மூங்கில்முறிச்சான் அடம்பன் புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்குத் தந்தை ச. மரியதாசன் சீமான் அடிகளார் தெரிவித்தார்.

அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது மெய்யியல் மற்றும் இறையியல் அடங்கிய முழுமையான குருத்துவக் கல்வியையும் கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் பெரிய குருமடத்தில் (1985 - 1993) நிறைவு செய்து ஆயர் நிலைக்கு உயர்த்தப்படும் முதலாவது ஆயராவார் என்பது சிறப்புத் தகவலாகும்.

தற்போது மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பரிபாலக ஆயராகவும் கொழும்பு மறைமாவட்டத்தின் தமிழ்த் துணை ஆயராகவும் பணியாற்றும் மேதகு கலாநிதி அன்ரன் பிள்ளைநாயகம் ஆண்டகை தன் ஆரம்ப பெரிய குருமடக் கல்வியை கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் பெரிய குருமடத்தில் பெற்றவர் என்பது மேலதிக தகவலாகும்.

ஆயரின் தாய் தந்தையர்களான திரு திருமதி மரிசால்பிள்ளை அந்தோனிப்பிள்ளை - கபிரியேல்பிள்ளை ஜெயசீலி தம்பதியர்கள் தமது மற்றப் பிள்ளைகளான தவராசா - நிக்கோலாப்பிள்ளை - றெஜினா - நல்லாயன் சபை அருட்சகோதரி ஞானசீலி ஆகியோருடன் தமது குடும்பத்திற்கு இறைவன் செய்த இந்த மாபெரும் செயலை எண்ணிக்கு தூகலிக்கும் வேளை மன்னார் மறைமாவட்ட குருக்கள், துறவியர், இறைமக்கள் அடங்கிய திரு அவை தமது மன்னார் மண்ணில் இருந்து முதல் தடவையாக ஓர் ஆயர் தோன்றியுள்ளார் என பேருவகை கொள்கிறது.

மன்னார் மறைமாவட்டத்தின் நான்காவது ஆயரான அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை மன்னார் மண்ணின் முதல் மைந்தராவார் என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டும். அவரின் பணியில் மன்னார் மறைமாவட்டம் மாண்புற வேண்டும்

மன்னார் மறைமாவட்ட மண் வேதசாட்சிகளின் இரத்தம் தோய்ந்த மண். 1544இல் திருச்சபை வரலாற்றில் ஒரே நேரத்தில் அதிக தொகையாக 600 வேதசாட்சிகளின் இரத்தத்தால் புனிதப்படுத்தப்பட்ட மண். போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க சமயத்தை பாதுகாக்க கத்தோலிக்க மக்கள் இரத்தம் சிந்தி சாட்சியம் பகிர்ந்த மண்.

இலங்கையின் 12 கத்தோலிக்க மறைமாவட்டங்களில் விகிதாசார ரீதியில் அதிக கத்தோலிக்கர்களைக் கொண்ட மறைமாவட்டங்களில் ஒன்றாகி பெருமை சேர்க்கும் மறைமாவட்டம் மன்னார் மறைமாவட்டம். (2005 கணக்கெடுப்பின்படி சிலாபம் 34.5 - மன்னார் 33.68 )

ஆசியாவின் மிகப்பழமையான அதே வேளை மரியன்னையின் உலகப்பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலங்களில் ஒன்றாக எண்ணப்படக் கூடிய யாத்திரைத்தலம் மன்னார் மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம் என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தம் இலங்கைக்கான வருகையின் போது தம் பாதம் பதித்து உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

இலங்கையின் இரண்டே இனங்களான சிங்கள மற்றும் தமிழ் மக்கள் ஆரம்பம் முதல் சங்கிலித் தொடராக அனுபவித்த இனமோதல்களின் உச்சமாக 30 ஆண்டு கால கொடிய போரைச் சந்தித்திருந்தாலும் சிங்கள மற்றும் தமிழ் கத்தோலிக்க மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒருதாய் மக்களாக ஒன்று கூடும் இடம் மன்னார் மறைமாவட்டத்தின் இதயமான மருதமடு அன்னையின் மடுப்பதியாகும்.

மன்னார் மண்ணின் மைந்தனாய் வேதசாட்சிகளின் இரத்தமும் இனப்போரின் இரத்தமும் தோய்ந்து அசைக்க முடியாத விசுவாசத்தில் ஊன்றி மடு அன்னையின் மைந்தனாய் நின்று - மன்னார் மண்ணோடும் மக்களோடும் இரண்டறக் கலந்து - மன்னார் மக்களின் தேடல்களையும் தேவைகளையும் நன்கு அறிந்து - மன்னார் மக்களின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் தெளிவாகப் புரிந்து - மன்னார் மக்களின் கடல் வளத்தையும் கமவளத்தையும் பனை வளத் தையும் படித்து உணர்ந்து - உம் சொற் படியே எனக்கு நிகழட்டும் (லூக்கா 1:38) என்னும் ஆயர்த்துவ விருதுவாக்கின்படி பொழியப்படும் அருள் வளங்களை மன்னார் மண் மீதும் மக்கள் மீதும் வாரி வழங்கி வாழ்த்தி நிற்கிறது பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் யாழ்ப்பாணம்.

பாலைக்குழி முன்பள்ளியில் (1970) கால்பதி த்த கல்விப்பரா யம் ஆரம்பக் கல்வியை பாலைக் குழி உரோமன் கத்தோலிக்க பாடசாலை (1971), தொடர் உயர் கல்வியை மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), யாழ்ப்பாணம் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தின் வழி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி (1980 - 1984) என நிறைவானது.

மெய்யியல் மற்றும் இறையியல் குருத்துவக் கல்வியை கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சவேரியார் பெரிய குருமடத்தில் (1985 - 1993) நிறைவு செய்து, 1994 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

முருங்கன் (1994 - 1996), முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகையின் செயலர் (1996 - 1999), செட்டிகுளம் (1999 - 2003), பள்ளிமுனை (2003 - 2006), கண்டி தேசிய குருமடத்தில் உரோமை உர்பாணியன் பல்கலைக் கழக இறையியல் இளமாணி (பி.ரீ.எச்) பட்டப் படிப்பு (2006), வங்காலை (2006 - 2009), ஐக்கிய அமெரிக்கா நியூயோர்க்கின் போர்டம் பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணி பட்டப்படிப்பு (2010 - 2014), மன்னார் மறை மாவட்ட மடுமாதா சிறிய குருமட அதிபர் (2014 - 2018), மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் (2018 - 2021), பேசாலை (2021 - 2023), இந்தியா பெங்களூரில் இளைஞர் மேய்ப்புப்பணிப் பராமரிப்புப் பயிற்சி (2022), மருதமடு அன்னையின் திருத்தலம் (2023 - 2024) என இவரின் பணித்தளங்கள் அமைந்துள்ளன.

பிரஜைகள் குழுவின் தலைவராக (2018) பணியாற்றிய இவர் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக் குழுவின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். 2002 ஆம் ஆண்டு யூலை 23 முதல் 28 வரை கனடா றொறென்ரோ மாநகரில் நடைபெற்ற 17 ஆவது உலக இளையோர் தினத்திற்கு மன்னார் மறை மாவட்ட இளையோர் பிரதிநிதிகளை இவர் அழைத்து சென்றமை சாதனையாகும். இவரின் தொடர் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்,**
**ஊடக வருகை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**யாழ்.பல்கலைக்கழகம் , வவுனியா பல்கலைக்கழகம்,**
**இயக்குநர் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்.**

# மிகவும் பலவீனமான ஆட்சியே நாட்டில் இன்று காணப்படுகின்றது

## சஜித் பிரேமதாச

(கொழும்பு)

வலுவான அரசாங்கத்திற்கு பதிலாக, வரலாற்றில் தோன்றிய மிகவும் பலவீனமான அரசாங்கமே இங்கு காணப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான தேர்தல் தொகுதி அமைப்பாளர் நியமனப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு என்பவற்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

10 பிரதான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி தமது வேலைத் திட்டத்தை முன்வைத்துள்ளது. அவை மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். இன்று, நாடு பயணிக்கும் பாதை தெளிவாக தெரிகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரிசையாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். நாட்டில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் வெளிப்படையான கொள்முதல் முறைகளின்படி இடம்பெற வேண்டும்.

முதலீட்டாளர்களை அரசாங்கம் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். 2028 ஆம் ஆண்டளவில் நாம் கடனைச் செலுத்த வேண்டும் என்பதால் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நாடு செலுத்த வேண்டிய கடனையும் வட்டியையும் செலுத்த வேண்டுமானால் அரசு அதிக வருமானத்தையும் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சி இலக்குகளையும் அடைய வேண்டும். இவ்வாறு நடக்கும் பட்சத்தில் ஒரு நாடாக எம்மால் மீண்டு வர முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட இணக்கப்பாடு மற்றும் சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து ஆராயும் பொருளாதார வல்லுநர்கள், அவர்களுடன் செய்து கொண்டுள்ள இணக்கப்பாடுகளின் இலக்குகளை நாம் அடையாவிட்டால், மற்றொரு கடன் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டியிருக்கும் என்று சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த இணக்கப்பாடுகளில் காணப்படும் பலவீனங்களை ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக் காட்டியதுடன் கடந்த அரசாங்கம் செய்த தவறுகளை இந்த அரசாங்கமும் முன்னெடுத்து வருகிறது.

2020 பெப்ரவரியில் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு கட்சியாக ஆரம்பிக்கப்பட்டது. 7 மாதங்களுக்குப் பிறகு, நாம் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொண்டோம்.

சுதந்திர ஜனநாயக வரலாற்றில் குறுகிய காலத்தில் ஒரு கட்சியாகப் போட்டியிட்டு அதிக எண்ணிக்கையிலான ஆசனங்களையும் வாக்குகளையும் வென்றெடுத்தோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டோம். தற்போது உள்ளூராட்சித் தேர்தல் வந்துள்ளது. இதனை நாம் வெற்றி கரமாக எதிர்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (நி-8)

# மாலைதீவின் வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

மாலைதீவு குடியரசின் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா கலீல் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தர உள்ளார்.

கலீல் கடந்த 2024 செப்ரெம்பரில் மாலைதீவு குடியரசின் வெளியுறவு அமைச்சராக ஜனாதிபதி முகமது முய்சுவால் நியமிக்கப்பட்டார்.

மாலைத்தீவு அமைச்சர், இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதையின் விழிப்புணர்வு நம்மிடம் இருக்கும்போதே மற்றவரிடமும் அதை உணர முடியும்.
- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமரின் யாழ்ப்பாண வருகை பயன்தருவதாய் அமையட்டும்

பிரதமர் ஹரிணி அமரசூரிய யாழ்ப்பாணத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பது எங்கள் கல்வியின் ஓர் அடையாளம். அங்கு வருகை தந்த பிரதமருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

அந்த வரவேற்பு நிச்சயம் பிரதமருக்கு மிகுந்த மனநிறைவைத் தந்திருக்கும் என நம்பலாம்.

இதேவேளை ஏலவே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவையும் தமிழ் மக்கள் வரவேற்றிருந்தனர்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் சுட்டிக் காட்ட வேண்டும்.

அதாவது ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி ஆகியோருக்கு யாழ்ப்பாண மக்கள் வழங்குகின்ற வரவேற்பும் அரவணைப்பும் என்பது உங்களால் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதைக் குறிப்பதாகும்.

இந்த உண்மையை ஜனாதிபதியும் பிரதமரும் உணர்ந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

முன்பெல்லாம் யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி அல்லது பிரதமர் வருகை தருவதாக இருந்தால், வீதி எங்கும் படையினர் குவிக்கப்பட்டிருப்பர்.

பொலிஸார் ரோந்து நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியிருப்பர்.

ஏதோ ஒரு பதற்றமான சம்பவம் நிகழ்ந்ததை போன்ற நிலைமை காணப்படும்.

ஆனால் இப்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் வருவதாக இருந்தால், அது தொடர்பில் தமிழ் மக்கள் தங்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதில் முனைப்புக் காட்டுகின்றனர்.

இவ்வாறு தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ள ஆர்வம் என்பது கடந்த கால சிங்கள ஆட்சியாளர்கள் எங்களை வருத்தி வதைத்தார்கள். எங்களை வஞ்சித்தார்கள்.

உண்மையில் சிங்கள மக்களுடன் எங்களுக்கு எந்தக் காழ்ப்புணர்வும் கிடையாது.

ஆனால் தமிழ் மக்களாகிய நாம் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளுடனும் வாழ வேண்டும்.

எங்களின் இந்த நினைப்பு நியாயமானது. அது நிராகரிக்கப்பட முடியாதது.

அதேநேரம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பதவியேற்ற பின்பு தமிழ் மக்கள் தங்களின் உறவுகளை நினைவுகூருவதில் தடையிருக்கவில்லை.

அத்துடன் சுதந்திர தினத்தில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி அநுர வலியுறுத்தியிருந்தார்.

இவையாவற்றுக்கும் மேலாக, இன - மத பேதமின்றி அனைத்து மக்களும் சமமாக நடத்தப்படுவர் என்ற ஜனாதிபதி அநுரவின் அறிவிப்பு தமிழ் மக்களை வெகுவாக ஈர்த்துள்ளது.

எனவே இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு ஜனாதிபதியும் பிரதமரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை முதன்மைப் படுத்த வேண்டும்.

# அரச ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 25 ஆயிரம் சம்பளம் அதிகரிக்க வேண்டும்

## ரோஹித அபேகுணவர்தன எம்.பி

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மேலும், சந்தையில் தற்போது பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன. அத்துடன் மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு இந்த அரசாங்கம் நிவாரணத்தினை வழங்க வேண்டும்.

உயர்ந்துள்ள வாழ்க்கைச் சுமைக்கமைய, அரச ஊழியர்களின் தற்போதைய சம்பளம் அவர்களுக்கு முழு மாதத்திற்குமான தேவைகளுக்குப் போதாது.

அரச ஊழியர்களின் தற்போதைய சம்பளத்தைக் கொண்டு மாதத்தில் இரண்டு வாரங்களை மாத்திரமே கொண்டு செல்ல முடியும். எனவே அவர்களுக்கான சம்பள அதிகரிப்பை அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதியினால் வரவு செலவுத் திட்டம் சபையில் முன்வைக்கப்படவிருக்கின்றது. இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக தங்களது சம்பளம் அதிகரிக்கப்படும் என்ற பாரிய எதிர்பார்ப்பு அரச ஊழியர்களிடத்தில் உண்டு.

இவ்வாறான நிலையில், அதிகரித்துள்ள வாழ்க்கைச் சுமையைக் கருத்திற்கொண்டு குறைந்தபட்சம் அரச ஊழியர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரையில் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# செலவுகளை மேலும் குறைக்க தேர்தல் முறைகளை மாற்ற வேண்டும்

## ரவி கருணா நாயக்க எம்.பி

(கொழும்பு)

செலவுகளை மேலும் குறைக்கும் வகையில் தேர்தல் முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் அவர்களின் வியாக்கியானம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் இதற்கு முன்னர் 8900 பேரின் செலவுகள் மற்றும் 2900 மில்லியன் ரூபா செலவிடும் பிரச்சினை தொடர்பில் கதைத்துள்ளோம்.

இந்நிலையில் தற்போது முடிந்தளவு செலவுகளை குறைத்துக்கொண்டு செல்கையில் இந்த விடயத்தில் இதற்கு மேலும் செலவுகளை தாங்கிக் கொள்ளக் கூடிய தேர்தல் முறையை உருவாக்க முடியாதா? மக்களிடையே இவ்வாறான செலவுகளை தாங்கிக்கொள்ள முடியுமா என்ற பிரச்சினைகள் உள்ளன.

இதனால் செலவுகளை குறைக்கக் கூடிய முறைகள் உள்ளனவா என்று அரசாங்கத்திடம் கேட்கின்றோம் என்றார். (ம-7)

# வெளிநாட்டில் தலைமறைவாகவுள்ள குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்துவரத் திட்டம்

இலங்கையில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வெளிநாட்டில் தலைமறைவாகவுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான திட்டம் உள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன்படி, இந்தியாவில் பதுங்கியுள்ள பல குற்றவாளிகள் விரைவில் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அத்துடன், இவ்வருடத்தில் இதுவரை 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் 07 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் மேற்கொள்ளப்பட்டவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று T56 துப்பாக்கிகள், 05 கைத்துப்பாக்கிகள் மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, போதைப்பொருள் நடவடிக்கை திட்டத்தின் கீழ் 16,000க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தார். (ம-7)

# பெப்ரவரி மாதத்தின் முதல் 13 நாட்களில்

## 1,15,043 சுற்றுலாப் பயணிகள் வருகை

2025 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதத்தின் முதல் 13 நாட்களில் 115,043 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி மாதம் 01ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 367, 804 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 59,391 ஆகும்.

அதன்படி, ரஷ்யாவிலிருந்து 48,411 சுற்றுலாப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 34,655 சுற்றுலாப் பயணிகளும் ஜேர்மனியிலிருந்து 23,280 சுற்றுலாப் பயணிகளும் சீனாவிலிருந்து 22,670 சுற்றுலாப் பயணிகளும் பிரான்ஸிலிருந்து 20,078 சுற்றுலாப் பயணிகளும் அவுஸ்திரேலியாவிலிருந்து 13,799 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம-7)

# மக்களை ஏமாற்றி மோசடி செய்த இருவர் கைது

(கொழும்பு)

நாட்டு மக்களை ஏமாற்றி மோசடியான முறையில் சுமார் 3 மில்லியன் ரூபா பணம் மோசடி செய்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட 28 வயதான சேனதீரகே துலான் மகேஷித மற்றும் அவருக்கு உதவிய இளைஞன் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கற்பிட்டி மற்றும் நுரைச்சோலை பகுதிகளை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளத்தில் போலிக் கணக்கின் மூலம் குறித்த பணம் மோசடி இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலிக் கணக்கின் மூலம் நன்கொடைகளை வசூலிப்பதன் மூலம் சந்தேகநபர்கள் பொதுமக்களை ஏமாற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளின் விளைவாக நேற்று இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலக மகளீர் அபிவிருத்தி நிலையத்தின் மனைப்பொருளியல் கண்காட்சி விசுவமடு மத்தி சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (படம்- தேவானந்தன்)

# முல்லை வைத்தியசாலைக்கு பிரதி அமைச்சர் உபாலி விஜயம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் நிலைமைகளை ஆராய்வதற்காக கூட்டுறவுப் பிரதி அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் நேரில் சென்று பார்வையிட்டதுடன் நோயாளர்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உமாசங்கர் அவர்களுடன் வைத்தியசாலையின் தேவைகள் மற்றும் குறைகளை நேரில் கேட்டறிந்து கொண்டார்.

மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் ஆண், பெண் விடுதி பற்றாக்குறை தொடர்பிலும் நோயாளர்கள் அவதியுறும் நிலைமைகள் தொடர்பிலும் நேரில் பார்வையிட்ட பிரதி அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் சிலவற்றிற்கு தற்காலிக தீர்வை ஏற்படுத்தித் தருவதாகவும் நிரந்தரத் தீர்வாக எதிர்காலத்தில் உரியவர்களுடன் கலந்துரையாடி பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் உறுதியளித்தார்.

இந்த விஜயத்தின் போது வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான என்.திலகநாதன், எம்.ஜெகதீஸ்வரன், வைத்தியர்கள் மற்றும் பிரதி அமைச்சரின் இணைப்பாளர்கள் முதலானோர் இணைந்திருந்தனர். (நி-8-299)

# விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்தார் ரவிகரன் எம்.பி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளியவளை கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட கமக்கார அமைப்பு பிரதிநிதிகளுக்கும், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்குமிடையில் முள்ளியவளை கமநலசேவை நிலையத்தில் குறைகேள் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இக் குறைகேள் சந்திப்பில் முள்ளியவளை கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பில் கமக்கார அமைப்பு பிரதிநிதிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்கள் கேட்டறிந்துகொண்டார்.

இச்சந்திப்பில் மிக முக்கியமாக கணுக்கேணிக்குளத்தின் சுமார் 3மைல் தூரமான நீர்ப்பாசன வாய்க்கால் சீரின்மையால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், குறித்த நீர்ப்பாசன வாய்க்காலை அமைத்துத் தருமாறும் விவசாயிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்தோடு வட்டுவாகல் பகுதியில்உள்ள மிகப் பிரதானமான மூன்று விவசாயவீதிகள் பாதிக்கப்பட்டுள்ளமையால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டதுடன், குறித்த விவசாய வீதிகளைச் சீரமைத்துத் தருமாறும் கமக்கார அமைப்பு பிரதிநிதிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதேவேளை கொண்டமடு விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதி, முள்ளியவளை மேற்கு பகுதியில் அமைந்துள்ள நெல் உலரவிடும் தளத்திற்குச் செல்லும் வீதியைச் சீரமைப்பது தொடர்பிலும், மதவளசிங்கன் குளத்தின் கீழான வயல் நிலங்களுக்கு யானை வேலி அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் யானை, குரங்குகளால் ஏற்படும் பாதிப்பு, மேய்ச்சல்தரவைப் பிரச்சினைகள் உள்ளிட்டபல்வேறு பிரச்சினைகள்தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

இந்நிலையில் விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட குறைபாடுகள், கோரிக்கைகள் தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படுமென பாராளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது. (நி-8-299)

# 'பிடியளவு கமநிலத்திற்கு ஒன்றிணைவோம்' செயற்றிட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்

(தருமபுரம்)

பிடியளவு கமநிலத்துக்கு ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் பயிரிடாது காணப்படும் சகல வயல் மேட்டு நிலங்களையும் வினைத் திறனாகத் துரிதமாகப் பயிரிடுதல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தலைமையில் அதன் உத்தியோகத்தர்கள்துண்டுப் பிரசுரங்கள் மூலம் விழிப் புணர்வு செயற்றிட்டத்தை நேற்று முன்னெடுத்திருந்தனர்.(நி-8-316)

# 'கிளீன் ஸ்ரீலங்கா' கிளி.யில் முன்னெடுப்பு

(முறிகண்டி)

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் "கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டம் நேற்று நாடு முழுவதும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த வகையில், கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ9 வீதியில் நீதிமன்ற கட்டடம் தொடக்கம் கரடிப்போக்கு சந்தி வரை வீதியில் அமைக்கப் பட்டுள்ள பூச்சாடிகளை மீள் புனருத்தானம் செய்வதற்கான பணிகள் நேற்று இடம் பெற்றன. (நி-8-100)

# இராசிபலன்

16.02.2025
மாசி 04, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 1.46 மணிவரை

அத்தம் பின்னிரவு 4.08 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
இராகுகாலம் 5.03-6.33 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி.

வளவன்




மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.




நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த விரயங்களும் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




குறைசொல்லியவர்கள் பாராட்டும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.




குடும்பத்தில் குதூகலம் கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், புகழ் பெற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, குடும்பப் பொறுப்புக்கள் கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், போசன சுகமுண்டு.




பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்ப ஒற்றுமை கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.




உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

சந்தேகம் ஏற்படும் போது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்குமரன்...

வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்தவேளை வாகனம் பரந்தன் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33)

## தமிழர்களின்...

தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் எல்லைப் பாதுகாப்பு இல்லை, குறுகிய நேரத்தில் இந்தியாவின் இராமேஸ்வரத்திற்குச் செல்ல முடியும் என்பதன் காரணமாகவே அண்மைக் காலமாகச் சீனாவின் பார்வை வடக்கை நோக்கியிருக்கின்றது.

சீனா இலங்கைக்கு உதவி செய்வதை விட இலங்கையிலுள்ள காணிகளையும் வளங்களையும் தனதாக்கிக் கொள்ளும் வகையிலேயே செயற்படுவதாகவும் சீனா அரசாங்கம் வடக்கில் அரிசியும் வலைகளையும் வழங்கி மக்களை அவர்கள் பக்கம் திசை திருப்ப முயற்சித்தபோதிலும் தமிழ் மக்களின் உணர்வுகளை ஒருபோதும் மாற்ற முடியாது எனச் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ம-7)

## சமமான...

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்டிருந்த பிரதமர், அங்கு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் சிறந்த கல்விக்கான ஒரு மையமாக விளங்குகிறது.

எனவே இங்கு உள்ளவர்களுக்குக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் வலியுறுத்த வேண்டிய தேவையில்லை.

சமூகத்தில் சிறந்த கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் கல்விக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கி வருகிறது.

அதற்கமைய கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் இடைவிலகலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அனைவரும் சிறந்த கல்வியை கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே அரசாங்கத்தின் இலக்கு எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ம-7,33)

## பூக்கண்டுகள்...

ஏனைய பகுதிகளுக்குத் தீ பரவுவதைத் தடுத்தபோதிலும் தீயினை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டுவர முடியாமையினால் குறித்த விற்பனை நிலையம் முற்றிலும் தீக்கிரையானது

சம்பவ இடத்துக்கு வருகை தந்த மானிப்பாய் பொலிஸார் தீப்பரவல் குறித்த விசாரணைகளை மேற்கொண்டனர்.

மின்னொழுக்குக் காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.போதனா...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்ற பிரதமர் ஹரிணி அமரசூரிய இளங்குமரனின் உடல் நிலைமை தொடர்பில் மருத்துவர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர். (ம-7,33)

## அநுர அரசாங்...

கெடுப்பு இடம்பெறவுள்ளது.

பாதீட்டுக் காலப்பகுதியில் காலை 9.30 முதல் 10.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையான காலப்பகுதியில் பாதீட்டு விவாதம் இடம்பெறும். (ம-7)

## பாலச்சந்திரன்...

தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர் இசைப்பிரியா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினது தலைவரின் மகன் பாலச்சந்திரனது மரணம் தொடர்பில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

இதுவொரு இலகுவான விடயம் அல்ல என்றும் தெரிவித்தார்.

அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினது தலைவரின் மகன் பாலச்சந்திரனது மரணச் செய்தி கேட்டு தான் துயரமடைந்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பயிரிடப்படாத...

விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நாடளாவிய ரீதியில் உள்ள 25 மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயிரிடப்படாத காணிகளில் பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் தேசிய வேலைத்திட்டம் பொல்கஹவெலவில் நேற்று ஆரம்பமான நிலையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (ம-7)

## உள்ளூ...

அதிகார சபைகள் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வியாக்கியானமளித்துள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பின் சாராம்சத்தை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன வெள்ளிக்கிழமை கூடிய விசேட சபை அமர்வில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மத்...

யளவில் நடைபெறவுள்ளது.

கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தின் போது முதலில் நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்குகள் சம்பந்தமாகக் கவனம் செலுத்தப்படவுள்ளது.

கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் அடுத்த விடயமாக புதிய யாப்புருவாக்கச் செயற்பாட்டில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான கோரிக்கையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்துள்ள கோரிக்கைக்கு இறுதியாகப் பதிலளிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மஹஜன சம்பத
திகதி 2025.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 5748
K 3 9 0 0 0 5
அத சம்பத K 0 0 0 5
சீட்டிழுப்பு இலக்கம் 323

தன நிதானய
திகதி - 2025.02.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1778
M 05 07 38 75 M
37882

மெகா பவர்
திகதி 15/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2096
Y 19 26 28 40 70

ஜய
திகதி 2025.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 016
H 2 4 4 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3990
சீட்டிழுப்பு திகதி 15.02.2025
Q 05 10 57 76
Q

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 1057
மகரம் 01 21 30 33 மகரம்
93395 16

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.02.2025 வெற்றி வாரம் 456
D 0 3 7 0 1 9
62485
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,186,701.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2722
சீட்டிழுப்பு திகதி 2025.02.15 தினம் சனிக்கிழமை
02 30 40 57 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,367,657.60

சனிதா
திகதி 15.02.2025 வெற்றி வாரம் 4883
07 29 30 65 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,529,248.80
62534

சசிரி
வாரம் 623
திகதி 15.02.2025
சனிக்கிழமை
10 18 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

சீட்டிழுப்பு வாரம் 4434
சீட்டிழுப்பு திகதி 15.02.2025 தினம் சனிக்கிழமை
05 24 39 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.11,959,378.00
156914

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 13 22 28 41 64
1898
15.02.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.565,409,220.80

அத கோட்டிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2548
சீட்டிழுப்பு திகதி : 2025.02.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,837,758.40
10 16 30 69 B
835934

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 ஆவணி பிறந்த, 5' 9" உயரம், அவிட்டம் நட்சத்திரம், 2 ம் பாதம், 7 இல் செவ்வாய் உள்ள DUBAI இல் Senior Accountant ஆக தொழில் புரியும் CIMA(UK), MBA(UK) படித்த மணமகனுக்கு படித்த தொழில் புரியும் மணமகள் தேவை.

(3436)

**076 855 0019/ 077 268 4477**

## வேலைவாய்ப்பு

- ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலையில் ஆங்கில, தமிழ் ஆசிரியர் தேவை.(Female)
  நேர்முகத் தேர்வு : 17.02.2025 ம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் காலை 10.00 மணி வரை நடைபெறும்.
  (பழக விரும்புபவர்களுக்கு 3 மாதம் பயிற்சிகள் வழங்கப்படும்.)
- கணினி நிலைய வேலைவாய்ப்பு (Female)
  (Ms office, Photoshop, page maker, Corel draw தெரிந்தவர்கள்
- அலுவலக உதவியாளர் (ஆண்கள்)
  (ஆட்டோ, வான் ஓடக்கூடியவர், Licence உள்ளவர்)
  வேலை ஆரம்பிக்கும் நேரம் காலை 7.00
  நேர்முகத்தேர்வு : 17.02.2025 ம் திகதி காலை 11.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும்.

புத்தூர், திருநெல்வேலி, இணுவில் ஆகிய இடங்களிற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

(3413)

**தொடர்புகளுக்கு : 077 377 0524**

## பதவி வெற்றிடம் - Sales Executive

**K.U.S Formwork & Scaffolding (PVT) LTD**

(வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்)

கொழும்பில் அமையப்பெற்றுள்ள பிரபல நிறுவனம் ஆகிய K.U.S Formwork and Scaffolding (Pvt) Ltd நிறுவனம் தனது உள்நாட்டு செயற்பாடுகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு விரிவுபடுத்தி வருவதால் எங்கள் நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கு தகுந்த அனுபவம் வாய்ந்த Sales Executive வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தேவை.

**எதிர்பார்க்கப்படும் கல்வித்தகைமைகள்**

- விற்பனைத்துறையில் 2 வருட குறைந்தபட்ச அனுபவம் (Minimum 2 years of experience in the field of Sales)
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் சான்றுதல் (Certification in sales and marketing from a recognized institute)

**எதிர்பார்க்கப்படும் ஏனைய தகைமைகள்**

- செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் மற்றும் வாகனம் வைத்திருத்தல் வேண்டும் (Should have a valid driving license (A, A1, B Class) and Vehicle)
- 22 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்/பெண் (Male/ Female between the age range of 22-40 years)

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அடிப்படை சம்பளம், வாகன கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் கமிஷன் வழங்கப்படும்.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள், சுயவிபரக்கோவையை hr@kus.com.lk எனும் Email முகவரிக்கு அனுப்பவும்.

(020)

**K.U.S Formwork & Scaffolding PVT Ltd**

**+94 112 572 727**

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் வீமன்காமத்தில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**076 444 9377**

(C-2270)




## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இயங்கும் குரு காட்வெயார் நிறுவனத்திற்கு 10Km க்கு உட்பட உள்ளவர்கள் தங்களிடம் உள்ள சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும். காட்வெயார் பொருட்கள் தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் வருகை தரவும்.

**குரு காட்வெயார்**

No. 175, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

**077 743 5265**

(C-2251)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Practical to UKVI on Computer

Special offer 50% Discount to all the Courses

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(3426)

**T.P : 077 780 3970, 074 007 1970**

## யாழ். சுன்னாகத்தில் English Medium Classes

G.C.E O/L, தரம் 6 - 10 (Group Classes)
English, Science, Maths, ICT and Sinhala வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

(851)

**070 697 6665, 070 686 7695**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-2276)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

**0777-068-777**
v2vacancies@gmail.com

## A/L PHYSICS

Electricity, Past paper
குழு, தனிப்பட்ட வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **077 600 4896**

**Y.M.C.A Thambasiddy S.C.K, 2nd cross st, Jaffna.**

(3410)

## சுன்னாகத்தில் விற்பனையாளர் (பெண்) தேவை

சுன்னாகத்தில் புகழ்பெற்ற புத்தகசாலைக்கு பெண் விற்பனையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(C-2274)

**076 749 0219**

## வயல் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி உருத்திரபுரம் 8 ம் வாய்க்கால் பிரதேசத்தில் இரணைமடு நீர்ப்பாசன திட்டத்திற்குட்பட்ட இரண்டு போக தண்ணீர் பங்கு உடைய 4 ஏக்கர் உறுதிக் காணி விற்பனைக்குண்டு.

(3428)

**077 645 0375**

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி மற்றும் கல்வியங்காடு பகுதியில் லொத்தர் சீட்டு விற்பனையாளர் தேவை.

(3422)

**077 078 2395**
**077 131 2534**

## ஊரெழுவில் 8 பரப்பு காணி விற்பனைக்கு

- பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம்
- 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்.
- காணியின் இரண்டு பக்க பாதையும் தார் வீதி
- நல்ல சூழல்
- செம்மண்.

(3414)

**077 617 2892**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 222/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 272/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg பயறு | - 699/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 760/= | |
| 1Kg கடலை | - 415/= | |
| 10Kg விஜிதா | - 2699/= | |
| 1Kg கீரிச் சம்பா | - 255/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை அரிசி | - 250/= | |
| 400g லக்ஸ்பிறே | - 980/= | ~~1050~~/= |
| 400g நெஸ்டமோல்ட் | - 735/= | ~~780~~/= |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80~~/= |



400g Anchor 999/= ~~1050~~/=



1Kg சன்லைட் தூள் 345/= ~~380~~/=

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(854)

**Happy Supermarket**
**0777 8080 30**

## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறையில் K.K.S சந்தி பலாலி விமான நிலையம் என்பவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் 7, 14, 21 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

(3416)

**075 521 3533**

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு :

(838)

**075 033 6759**

## UK & CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

(C-2275)

**Exponet Overseas consultant**

No-125, Arasady Road, Jaffna.

**071 415 0995**
**021 435 5113**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org